بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحْمَدُهُ وَنُصَلِّي عَلَى رَسُولِهِ الْكَرِيمِ وَعَلَى عَبْدِهِ الْمَسِيحِ الْمَوْعُودِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 8

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444-ஷஃபான் 02 ★ ஹிஜ்ரி ஷம்ஸி-1402, தப்லீக் 23 ★23 பிப்ரவரி -2023

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّمَا الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ اِذَا ذُكِرَ اللّٰهُ وَجِلَتْ قُلُوْبُهُمْ

**பொருள் :**

அல்லாஹ்வின் பெயர் நினைவு கூரப்படும்போது எவர்களின் உள்ளங்கள் அஞ்சுகின்றனவோ அவர்களே உண்மையான நம்பிக்கை கொண்டவர்களாவர்.

(அல் அன்ஃபால்:3)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இந்த காலகட்டத்தில் இஸ்லாத்திற்கு எதிராக நிலவி வரும் குழப்பத்தை அகற்றுவதில் சிறிது பங்கு பெறுவது ஒரு முஸ்லிமிற்கு அவசியமாகும்

**விதிக்கப்பட்ட விவகாரம்**

கூறினார்கள்: நமது எதிரிகளில் ஏராளமான நபர்கள் இன்னும் நமது ஜமாஅத்தில் நுழைவது விதிக்கப்பட்ட ஒன்றாகும். அவர்கள் எதிர்த்து வருகின்றனர். ஆனால், இறுதியில் நீங்களும் இதே மக்களுடன் இணைந்து விடுவீர்கள் என்று வானவர்கள் அவர்களைப் பார்த்து சிரிக்கின்றனர். அவர்கள் நமது இரகசிய கூட்டத்தினர் ஆவர். அவர்கள் நம்முடன் ஒருநாள் இணைந்துவிடுவர்.

**இக்காலத்தின் பெரிய இறை வணக்கம்**

இந்த காலகட்டத்தில் இஸ்லாத்திற்கு எதிராக நிலவி வரும் குழப்பத்தை அகற்றுவதில் சிறிது பங்கு பெறுவது ஒரு முஸ்லிமிற்கு அவசியமாகும். இந்த குழப்பத்தை அகற்றுவதற்காக ஒவ்வொருவரும் பங்கு பெறுவதே பெரும் இறை வணக்கமாகும். தற்போதைய காலத்தில் தீமைகளும், ஏளனங்களும் பரவியுள்ளன. தமது சொல் ஆற்றலாலும், அறிவாலும், அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள எல்லா ஆற்றல்களாலும் களங்கமற்ற முயற்சிகளாலும் அந்த விஷயங்களை உலகிலிருந்து அவர்கள் அகற்ற வேண்டும். இவ்வுலகிலேயே ஒருவருக்கு அனைத்து சுகபோகங்களும், இன்பமும் கிடைத்து விட்டால் அதனால் என்ன பயன்? இவ்வுலகிலேயே நற்கூலியை பெற்றுவிட்டால் என்ன பயன்? மறுமையின் நற்கூலியை பெறவேண்டும். அதற்கு எல்லையே இல்லை. இறைவனுக்கு தனது ஏகத்துவத்தின் மீது இருக்கின்ற உணர்வைப் போன்று இறைவனின் ஏகத்துவத்தின் மீது ஒவ்வொருவருக்கும் உணர்வு இருக்க வேண்டும். சிந்தித்துப் பாருங்கள்! நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்ற அநீதிக்குள்ளானவர் உலகில் எங்கே

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

## முழு பிரபஞ்சமும் ஒரே சங்கிலியின் வளையங்களை உள்ளடக்கியுள்ளது என்றால் பின்னர் அதனை படைக்கக்கூடியவன் ஒரே இறைவன் ஆவான் என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும்

اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَالَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ قُلُوْبُهُمْ مُّنْكِرَةٌ وَّ هُمْ مُّسْتَكْبِرُوْنَ ۝٢٣

பொருள்: உங்களின் வணக்கத்திற்குரியவன் ஏக இறைவனாவான். மறுமையின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களின் உள்ளங்கள் (உண்மையை) வெறுப்பவையாகும். மேலும், அவர்கள் பெருமையடிப்பவர்களாவார்கள். (அந்நஹ்ல்: 23)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

உங்களின் இறைவன் ஏக இறைவனாவான் என்ற கூற்று வெற்று வாதம் அல்ல. திருக்குர்ஆன் நிராகரிப்பாளர்களிடம் ஒன்றை கூறும் போது வெறும் வாதத்தை மட்டுமே முன் வைப்பதில்லை. ஏனெனில், வெறும் வாதம் அவர்கள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மாறாக, அதுபோன்ற தருணங்களில் இறைவன் இரண்டு வழிமுறைகளில் ஒரு வழிமுறையை மேற்கொள்கின்றான். ஒன்று, வாதத்தை முன்வைத்த பிறகு உடனேயே அதன் சான்றுகளை வழங்கிவிடுகின்றான் அல்லது சான்றுகளை எடுத்துரைத்த பிறகு அதன் விளைவை எடுத்துரைக்கின்றான். இந்த இரண்டு இயற்கையான வழிமுறைகள் மூலமாக மட்டுமே மனித மூளை ஆறுதல் அடைகிறது. மேலும், இரண்டு வழிமுறைகளும் தத்தமது வடிவில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை ஆகும். சிலமுறை வாதத்தை எடுத்துரைத்த பிறகு சான்றுகளை கொடுப்பது பயனளிக்கின்றது. சிலமுறை சம்பவங்களை எடுத்துவைத்த பிறகு அவற்றின் இயற்கை விளைவுகளை எடுத்துரைப்பது பயனளிக்கின்றது. இந்த இடத்தில் இரண்டாவது வழிமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முந்தைய வசனத்தின் அறிவார்ந்த விளைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

முந்தைய வசனத்தில் இரண்டு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒன்று இதுவாகும்.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

## நபிமொழி

**மதீனாவின் சிறப்புகள்**

(1871) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

யஸ்ரப் என்று அழைக்கப்படுகின்ற மற்றும் எல்லா ஊர்களையும் மிகைத்து நிற்கக்கூடிய ஓர் ஊருக்கு (ஹிஜ்ரத் செய்து செல்லுமாறு) எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த ஊர் மதீனா ஆகும். இரும்பின் துருவை உலை நீக்கிவிடுவது போன்று மதீனா நகரம் (தீய) மக்களை (குப்பையைப் போன்று) வெளியேற்றிவிடும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

குறிப்பு: ஹஸ்ரத் ஸய்யித் ஸைனுல்ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதற்கு விளக்கமளிக்கின்றார்கள்:

தீய கூட்டத்தினர் மதீனாவில் இல்லாதபோதுதான் மதீனாவின் புனிதம் உரிய முறையில் நிலை பெற்றிருக்க முடியும். பிற்காலத்தின் நிகழ்வுகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றின் ஒவ்வொரு சொல்லையும் உண்மைபடுத்தியுள்ளன. யூத கோத்திரங்கள் உடன்படிக்கைகளை முறித்தார்கள். வெளிப்புற எதிரிகளுடன் இணைந்து இரகசிய சதித்திட்டம் தீட்டி மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க செய்தனர். இறுதியில் தனது நம்பிக்கை துரோகத்தின் விளைவாக ஒருவருக்கு பின் ஒருவர் என அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மதீனா இஸ்லாமிய உலகின் முதன்மையான தலைமையகமாக ஆனபோதும், குலஃபாயே ராஷிதீனின் அருளுக்குரிய காலத்தில் மகத்துவ மிக்க வெற்றிகள் கிடைத்தபோதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றின் இரண்டாம் பகுதியும் முழுமையடைந்தது. மற்ற ஊர்களை மிகைத்துவிடும் என்பதே மற்ற ஊர்களை (மதீனா) தின்றுவிடும் என்பதன் பொருள் ஆகும்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3, மதீனாவின் சிறப்புகள், பதிப்பு 2008)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இறைவன் உங்களை வீணாக்கிவிடுவான் என்று எண்ணாதீர்கள். நீங்கள் இறைவனின் கையால் பூமியில் நடப்பட்ட ஒரு விதையாவீர்கள். இறைவன் கூறுகின்றான்: இந்த விதை வளரும்; கனி தரும், எல்லாப் புறத்திலிருந்தும் அதன் கிளைகள் வெளிப்படும். ஒரு பெரிய மரமாக மாறிவிடும். இன்ஷா அல்லாஹ். எனவே இறைவனின் வாக்குறுதியில் நம்பிக்கை கொள்பவர், இடையில் வரக்கூடிய சோதனைகளைக் கண்டு அஞ்சாதவர் அருளுக்குரியவர் ஆவார். ஏனெனில், இறைவன் உங்களை சோதித்துப் பார்ப்பதற்காக சோதனைகள் வருவதும் அவசியமாகும்**

**கடந்த நாட்களில் ஆஃப்ரிக்க கண்டத்தின் நாடான புர்கினாஃபாஸ்ஃவில் அன்பு, நேசம், நன்றியுணர்வு, கலப்பற்ற தன்மை, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கை ஆகியவற்றால் நிறைந்திருந்த ஜமாஅத் மக்கள் கூட்டாக வெளிப்படுத்திய அந்த முன்மாதிரி மிகவும் வியப்பிற்குரியதாகும். அதற்கு நிகர் அதுவே தான்**

**ஜனவரி 11, அன்று இஷா நேரத்தில் ஒன்பது அஹ்மதி சான்றோர்களை பள்ளிவாசலின் வளாகத்தில், மற்ற தொழுகையாளிகளுக்கு முன்னால் வைத்து இஸ்லாம் அஹ்மதிய்யத்தை நிராகரிக்காததன் அடிப்படையில் ஒவ்வொருவராகக் கொன்று ஷஹீத் ஆக்கப்பட்டனர்**

**என் தலையை வெட்ட வேண்டும் என்றால் வெட்டிக் கொள்ளுங்கள். ஆனால், என்னால் அஹ்மதிய்யத்தை விட முடியாது. எந்த உண்மையை நான் பெற்று விட்டேனோ அதை விட்டு நான் பின்வாங்குவது சாத்தியமே இல்லை. ஈமானுக்கு முன் உயிருக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது? - இமாம் இப்ராஹீம் சாஹிப் ஷஹீது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 ஜனவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **20ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ ؕ
بَلْ اَحْيَآءٌ وَّلٰكِنْ لَّا تَشْعُرُوْنَ ○ وَلَنَبْلُوَنَّكُمْ
بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ
وَالثَّمَرٰتِ ؕ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ○ الَّذِيْنَ اِذَآ
اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْٓا اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رٰجِعُوْنَ ○

மேலும் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை, இறந்தவர்கள் என்று கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை. மேலும், ஓரளவு பயத்தாலும், பசியாலும், உயிர்கள் மற்றும் கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம்.

மேலும் (தூதரே!) நீர் பொறுமையாளர்களுக்கு நற்செய்தி கூறுவீராக. அவர்கள் தங்களுக்குத் துன்பம் ஏற்படும்போது நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; மேலும் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள். (சூரா அல்பக்ரா: 155- 157)

அல்லாஹ்வின் வழியில் உயிரை அர்ப்பணிப்பவர்களைப் பற்றி, அவர்கள் இறந்தவர்கள் அல்ல. மாறாக, உயிருள்ளவர்களே என்று அல்லாஹ் இதைக் கூறியிருக்கின்றான். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கடந்த நூற்றாண்டுக்கும் மேலான காலகட்டத்தில் அல்லாஹ்வின் வழியில், உயிர்த் தியாகங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவர்களுடைய தியாகங்கள் வீணாகிப் போயினவா?

இல்லை. மாறாக, எங்கு அல்லாஹ் இந்த ஷஹீத்மார்களின் அந்தஸ்தைத் தனது வாக்குறுதிக்கு ஏற்ப உயர்த்திக் கொண்டே சென்றானோ அங்கு ஜமாஅத்திற்கு முன்னரை விட அதிகம் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே வந்துள்ளான். இந்த ஷஹீத்மார்கள் தமக்கே உரிய அந்தஸ்துகளை மறுமையில் பெற்று, அவர்களின் அந்தஸ்துகளும் எப்பொழுதும் உயர்ந்துக் கொண்டே இருக்கப்போகும் அதேவேளையில் இந்த உலகத்திலும் நிரந்தரமாக, அவர்களுடைய பெயர்கள் ஒளிமயமாக உள்ளன. அல்லாஹ்வின் வழியில் அவர்கள் உயிரை அர்ப்பணிப்பது தமக்காக மட்டும் இருப்பதில்லை. அதற்கும் மேற்பட்டு ஜமாஅத்தின் வாழ்வுக்கும் காரணியாக அமைகின்றது. இவர்கள்தான் பின்னால் உயிருடன் இருப்பவர்களின் வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் வழியாக ஆகின்றார்கள். பின்னர், அவர்கள் எவ்வாறு மரணித்தவர்கள் ஆக முடியும்?

ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா அப்துல் லத்தீஃப் சாஹிப் (ரலி) ஷஹீத் அவர்களின் தியாகத்தின் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஆரம்பமான இந்த உயிரை அர்ப்பணித்தல், பொதுவாக ஆஃப்கானிஸ்தான் மற்றும் துணைக் கண்டத்தின் அஹ்மதிகளின் பங்கில் இருந்தது. ஆஃப்ரிக்காவில் கூட ஒரு கலப்பற்ற அஹ்மதி காங்கோவில் 2005-ல் ஜமாஅத்திற்காகவே தம் உயிரை அர்ப்பணித்திருக்கின்றார். ஆனால் கடந்த நாட்களில் ஆஃப்ரிக்க கண்டத்தின் நாடான புர்கினாஃபாஸ்ஃவில் அன்பு, நேசம், நன்றியுணர்வு, கலப்பற்ற தன்மை, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கை ஆகியவற்றால் நிறைந்திருந்த ஜமாஅத் மக்கள் கூட்டாக வெளிப்படுத்திய அந்த முன்மாதிரி மிகவும் வியப்பிற்குரியதாகும். அதற்கு நிகர் அதுவே தான்.

அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை நிராகரிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஹஸ்ரத் ஈஸா (அலை) வானத்தில் உயிரோடு இருக்கின்றார்; வானத்திலிருந்து இறங்குவார் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது நாங்கள் உங்களுக்கு உயிர்பிச்சை வழங்கிவிடுகிறோம் என்று அவர்களிடம் கூறப்பட்டது.

ஆனால், ஈமான் மற்றும் நிச்சய உறுதியால் நிறைந்திருந்த அந்த மக்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள்: அவர்களின் ஈமான் மலையையும் விட உறுதியாகத் தென்படுகிறது.

உயிர் ஒருநாள் போகத்தானே போகிறது. இன்று இல்லை என்றால் நாளை. அதைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் எங்களுடைய ஈமானை விற்க முடியாது. எந்த உண்மையை நாங்கள் பார்த்துவிட்டோமோ அதை எங்களால் விட முடியாது.

இவ்வாறு ஒருவருக்கு பிறகு ஒருவர் எனத் தம் உயிரை அர்ப்பணித்துக்

கொண்டே சென்றுவிட்டனர். அவர்களின் மனைவிமார்களும், பிள்ளைகளும் கூட இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாரும் அழுது புலம்பவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தக் காலத்திற்கு பிறகு ஆஃப்ரிக்காவில் இன்னும் சொல்வதாயின் அஹ்மதிய்யத்தின் உலகில் தமது தியாகத்துக்கான ஒரு புதிய அத்தியாயத்தை இந்த மக்கள் எழுதியுள்ளனர். ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் (உயிர்த்) தியாகம் செய்திருந்தார்கள். அதன்பிறகு இந்த மக்கள் தம் உலக வாழ்க்கையை அர்ப்பணித்து நிரந்தர வாழ்வைப் பெறக் கூடியவர்களாக ஆகிவிட்டனர். அவர்கள் உயிர், செல்வம் மற்றும் நேரத்தை அர்ப்பணிப்பதாக வாக்குறுதி அளித்து அதை நிறைவேற்றிவிட்டார்கள். மேலும் எப்படி நிறைவேற்றினார்கள் என்றால் பின்னால் வந்து முன்னால் வந்தவர்களை விட முந்திச் சென்றுவிட்டார்கள். அல்லாஹ் தன் வழியில் தியாகங்கள் செய்பவர்களுக்காக தான் வழங்கியுள்ள அந்த நற்செய்திகளுக்கு இவர்களில் ஒவ்வொருவரையும் வாரிசாக்குவானாக!

இப்பொழுது நான் அந்த ஷஹீத்மார்களின் வாழ்க்கை நிலைகளைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பேன். அவற்றிலிருந்து அவர்களின் ஈமானின் உறுதித் தன்மை பற்றி தெரிய வருகிறது. விவரங்களுக்கு ஏற்ப, புர்கினோஃபாஸ்ஃவில் டோரீ என்ற மண்டலம் உள்ளது. அங்கு மஹ்தியாபாத் என்ற ஒரு புதிய இடம் உருவானது. அங்கு ஜமாஅத் உள்ளது. ஜனவரி 11, அன்று இஷா நேரத்தில் ஒன்பது அஹ்மதி சான்றோர்களை பள்ளிவாசலின் வளாகத்தில், மற்ற தொழுகையாளிகளுக்கு முன்னால் வைத்து இஸ்லாம் அஹ்மதிய்யத்தை நிராகரிக்காததன் அடிப்படையில் ஒவ்வொருவராகக் கொன்று ஷஹீத் ஆக்கப்பட்டனர்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அறிக்கைப்படி, இஷா நேரத்தில் நான்கு பைக்கில் ஆயுதம் ஏந்திய 8 பேர் பள்ளிவாசலுக்கு வந்தார்கள். அந்த ஆயுதம் ஏந்தியவர்கள் அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கு வருவதற்கு முன்னால், முதலில் அருகில் அமைந்துள்ள வஹாபிகளின் பள்ளிவாசலில் இருந்தார்கள். அங்கு அவர்கள் மஃக்ரிபிலிருந்து இஷா வரையிலான நேரத்தை செலவிட்டார்கள். ஆனால், அங்கு அவர்கள் யாருக்கும் எந்த இழப்பையும் ஏற்படுத்தவில்லை.

ஏனெனில், அவர்கள் அஹ்மதிகளுக்காகத்தான் வந்திருந்தார்கள். இந்தத் தீவிரவாதிகள் அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கு வந்தபோது, அப்பொழுது பள்ளியில் இஷாவுக்கு பாங்கு சொல்லப்பட்டுக் கொண்டிருந்தது. அது வரை சில தொழுகையாளிகளும் வந்திருந்தார்கள். மற்றவர்களும் வந்து கொண்டிருந்தார்கள். பாங்கு முடிந்ததுமே இந்தத் தீவிரவாதிகள் பாங்கு சொல்பவர் மூலம் இவ்வாறு அறிவிப்பு செய்ய வைத்தார்கள்:

மக்கள் விரைவாக பள்ளிவாசலுக்கு வாருங்கள். சில மக்கள் வந்துள்ளனர். அவர்கள் பேச வேண்டும். இந்த மக்கள் ஒன்றுகூடிய பிறகு, பள்ளிவாசலின் இமாம் யார்? என்று தீவிரவாதிகள் கேட்டனர். அல் ஹாஜ் இப்ராஹீம் பித்காஹ் சாஹிப் அவர்கள் தாம் பள்ளியின் இமாம் என்று கூறினார்கள். பின்னர், துணை இமாம் யார்? என்று அவர்கள் கேட்ட போது உமர் ஆஃகு அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள், தாம் துணை இமாம் என்று கூறினார்கள்.

தொழுகைக்கான நேரம் ஆன பிறகு, இப்ராஹீம் சாஹிப் அவர்கள் தீவிரவாதிகளிடம் எங்களைத் தொழ விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால், அவர்கள் தொழுவதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆயுதம் ஏந்தி இருந்தவர்கள் ஜமாஅத்தின் கொள்கையைப் பற்றி இமாமிடம் பல கேள்விகள் கேட்டார்கள். அதற்கான பதில்களை இமாம் சாஹிப் அவர்கள் திருப்தியான முறையிலும் வீரமான முறையிலும் அளித்தார்கள்.

நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்பவர்கள் ஆவோம் என்று இமாம் சாஹிப் அவர்கள் கூறினார்கள். நீங்கள் எல்லாம் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் கேட்டார்கள். நாங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் என்று இமாம் சாஹிப் கூறினார்கள்.

பின்னர், கொள்கைப் பற்றிக் கேட்டார்கள். உங்களது கொள்கைப்படி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா? அல்லது மரணித்துவிட்டார்களா? என்று தீவிரவாதிகள் கேட்டார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்துவிட்டார்கள் என்று இமாம் சாஹிப் கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், அதற்கு தீவிரவாதிகள் இல்லை, ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிருடன் இருக்கின்றார்கள்; அவர்கள் திரும்பி வந்து தஜ்ஜாலைக் கொல்லுவார்கள்; பிறகு, முஸ்லிம்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பார்கள் என்றார்கள்.

இந்த நம்பிக்கையிலேயே இந்த மக்கள் அமர்ந்திருக்கின்றார்கள். பின்னர், இமாம் மஹ்தி யார்? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு இமாம் சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) காதியானி அவர்கள் இமாம் மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் வருகை தந்திருக்கின்றார்கள் என்று கூறினார்கள். கடைசியில் ஆயுதம் ஏந்தியிருந்த அந்த மக்கள் இந்த விஷயங்களைக் கேட்டுவிட்டு அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல. மாறாக, முழுமையான காஃபிர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு அவர்கள் இமாம் சாஹிப் அவர்களை பள்ளிவாசலுடன் இணைந்துள்ள அஹ்மதிய்யா தையல் மையத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவர்கள் அந்தப் புகைப்படங்களை எடுத்துக் கொண்டு இமாம் சாஹிப் அவர்களுடன் திரும்பி பள்ளிவாசலுக்கு வந்துவிட்டார்கள்.

பின்னர், அந்தப் புகைப்படங்கள் பற்றி இமாம் இப்ராஹீம் சாஹிப் அவர்களிடம் கேள்விகள் கேட்டனர். இமாம் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் பெயர்களைக் கூறினார்கள். மேலும் ஒவ்வொரு படத்தையும் பற்றி அறிமுகம் செய்து வைத்தார்கள். மேலும், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், இமாம் மஹ்தியாகவும் வந்திருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் மிர்ஸா குலாம் அஹ்மதுடைய நபித்துவ வாதம் பொய்யானது என்று கூறினார்கள். நவூதுபில்லாஹ்

பின்னர், தீவிரவாதிகள் பள்ளிவாசலில் இருந்த தொழுகையாளிகளில் பிள்ளைகளையும், இளைஞர்களையும் பெரியவர்களையும் தனித்தனிக் குழுவாக அமைத்தார்கள்.

அப்பொழுது பள்ளிவாசலில் குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள், பெண்கள் உட்பட 60 லிருந்து 70 பேர் வரை இருந்தார்கள். திரைக்கு அப்பால் 10 முதல் 12 பெண்கள் அப்போது தொழுகைக்காக இருந்தார்கள். வயது அடிப்படையில் குழுக்கள் அமைத்த பிறகு, பெரிய வயது மக்களிடம் அந்தத் தீவிரவாதிகள் அவர்களைப் பள்ளிவாசலின் வளாகத்திற்கு வருமாறு கூறினார்கள். அப்போது பள்ளிவாசலில் மொத்தம் 10 அன்ஸார் சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் இயலாதவராகவும் இருந்தார். அந்த இயலாத சகோதரரும் மற்ற அன்ஸார் சகோதரர்களுடன் எழுந்து வெளியே செல்ல முற்பட்டபோது, நீ எந்த வேலைக்கும் உதவ மாட்டாய். உட்கார்ந்தே இரு என்று கூறி அவர்கள் உட்கார வைத்துவிட்டார்கள். மற்ற ஒன்பது பேரை அவர்கள் அழைத்துக் கொண்டு வளாகத்திற்கு வந்து விட்டார்கள். பள்ளிவாசலின் வளாகத்தில் நிற்க வைத்து இமாம் இப்ராஹீம் பித்காஹ் சாஹிப் அவர்களிடம் அவர்கள் அஹ்மதிய்யத்தை நிராகரித்து விட்டால், அவர்கள் விடப்படுவார்கள் என்று கூறினார்கள்.

இமாம் சாஹிப் அவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள்:

**என் தலையை வெட்ட வேண்டும் என்றால் வெட்டிக் கொள்ளுங்கள். ஆனால், என்னால் அஹ்மதிய்யத்தை விட முடியாது. எந்த உண்மையை நான் பெற்று விட்டேனோ அதை விட்டு நான் பின்வாங்குவது சாத்தியமே இல்லை. ஈமானுக்கு முன் உயிருக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது?**

தீவிரவாதிகள் இமாம் சாஹிப் அவர்களின் கழுத்தில் பெரிய கத்தியை வைத்து, அவர்களைப் படுக்க வைத்து அறுக்க முற்பட்டார்கள். ஆனால், இமாம் சாஹிப் அவர்கள் தடுத்து, நான் படுத்தவாறு உயிரை விடுவதற்கு பதிலாக நின்றவாறு உயிரை விட விரும்புவேன் என்று கூறினார்கள். இதனால், அவர்கள் இமாம் சாஹிப் அவர்களை துப்பாக்கியால் சுட்டு ஷஹீத் ஆக்கிவிட்டார்கள். எல்லாருக்கும் முதலாவதாக இமாம் அல்ஹாஜ் இப்ராஹீம் பித்காஹ் சாஹிப் அவர்கள் ஷஹீத் ஆனார்கள்.

இமாம் சாஹிப் அவர்களை இரக்கமற்ற முறையில் ஷஹீத் ஆக்கிய பிறகு தீவிரவாதிகள் மற்ற மக்கள் பயந்து ஈமானை விட்டு விடுவார்கள் என்று நினைத்தார்கள். எனவே, அவர்கள் அடுத்த , அஹ்மதி சான்றோரிடம், நிராகரிக்கிறாயா? இல்லை உன் இமாமுக்கு நாங்கள் ஏற்படுத்திய முடிவை உனக்கும் ஏற்படுத்தட்டுமா? என்று கேட்டார்கள்.

அந்த பெரியவர் மிகவும் தைரியமாகவும், வீரமாகவும் அஹ்மதிய்யத்தை நிராகரிப்பது சாத்தியமில்லை: எந்த வழியில் சென்றவாறு எங்கள் இமாம் உயிரை அர்ப்பணித்தார்களோ நாங்களும் அந்த வழியிலேயே செல்வோம் என்று கூறினார்கள்.

இதனால் அவர்களையும் தலையில் துப்பாக்கியால் சுட்டு ஷஹீத் ஆக்கப்பட்டார்கள். பின்னால் (உயிருடன்) இருந்த நபர்களிடமும் தனித்தனியாக இமாம் மஹ்தியை நிராகரித்துவிட்டால் அஹ்மதிய்யத்தை விட்டு விட்டால் அவர்களை எதுவும் செய்யப்பட மாட்டாது. உயிருடன் விடப்படுவார்கள் என்று கூறப்பட்டது. எல்லா அஹ்மதி பெரியவர்களும் மலைகளைப் போன்று உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்கள். அவ்வாறு வெளிப்படுத்திய வண்ணம் துணிச்சல் மற்றும் வீரத்துடன் ஷஹாதத்தை கட்டியணைப்பதை ஏற்றார்கள்.

ஒருவர் கூட சிறிதளவும் பலவீனத்தையும் காட்டவில்லை ; அஹ்மதிய்யத்தையும் நிராகரிக்கவில்லை. ஒருவருக்குப் பிறகு, ஒருவராக ஷஹீத்மார்கள் விழுந்து கொண்டே சென்றார்கள். ஆனால், எவருடைய ஈமானும் அசையவில்லை. எல்லாரும் ஒருவர் மற்றவரைக் காட்டிலும் அதிகம் உறுதியான நம்பிக்கை மற்றும் துணிச்சலை வெளிப்படுத்தினார்கள்.

ஈமானின் கொடியை உயரத்தில் வைத்த வண்ணம் அல்லாஹ்வுக்கு முன் தம் உயிர்களை அர்ப்பணித்துவிட்டார்கள். ஒவ்வொரு ஷஹீதையும் குறைந்தது மூன்று தோட்டாக்களால் சுடப்பட்டது. இந்த ஒன்பது ஷஹீத்மார்களில் இரண்டு இரட்டை சகோதரர்களும் கூட இருந்தார்கள். 8 பேர் ஷஹீத் ஆக்கப்பட்டு விட்ட பிறகு, 44 வயதாகியிருந்த ஆஃகு அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் எஞ்சியிருந்தார்கள்.

அன்னார் வயதின் அடிப்படையில் எல்லா ஷஹீத்மார்களைக் காட்டிலும் சிறியவர்களாக இருந்தார்கள். தீவிரவாதிகள் அன்னாரிடம், நீ இளைஞன் ஆவாய். அஹ்மதிய்யத்தை நிராகரித்து உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாமே? என்று கேட்டார்கள்.

அதற்கு, எந்த வழியில் சென்று என் பெரியவர்கள் தியாகம் செய்தார்களோ அது உண்மையின் வழியாகும். நானும், என் இமாம் மற்றும் பெரியவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஈமானுக்காக என் உயிரை அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன் என்று அன்னார் மிகவும் தைரியமாக கூறினார்கள். இதனால், அவர்களும் மிகவும் இரக்கமற்ற முறையில் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் அவர்களைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தத்கிரத்துஷ் ஷஹாததைன் என்ற நூலில் கடைசியில் ஒரு கனவைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு, எழுதியுள்ளார்கள்: கனவைப் பற்றி குறிப்பிட்டவாறு எழுதுகிறார்கள்:

அல்லாஹ் அவர்களின் பிரதிநிதிகள் பலரைப் பிறக்கச் செய்துவிடுவான். அன்னார் தமது கனவிலிருந்து, ஸாஹிப்ஸாதா சாஹிப் அவர்களின் ஷஹாதத்துக்குப் பிறகு, அல்லாஹ் இவர்களின் பிரதிநிதிகள் பலரைப் பிறக்கச் செய்துவிடுவான் என்று தமக்கு நம்பிக்கை இருக்கிறது என்ற கருத்தை எடுத்தார்கள்.

இன்று ஆஃப்ரிக்காவில் வசிக்கக்கூடியவர்கள் ஒட்டு மொத்தமாக இதற்கான முன்மாதிரியைக் காட்டிவிட்டார்கள். மேலும், பிரதிநிதித்துவத்திற்கான உரிமையை நிறைவேற்றிவிட்டார்கள் என்பதற்கு நாம் சாட்சியாக உள்ளோம்.

தீவிரவாதிகள் பள்ளிவாசலுக்கு வந்ததிலிருந்து கேள்விகள் கேட்டது, கொள்கைகள் குறித்து விரிவாக விவாதம் செய்தது மற்றும் எல்லா வகைகளையும் செய்து முடித்துவிட்டு பள்ளிவாசலிலிருந்து வெளியேறுவது வரை குறைந்தபட்சம் ஒன்றரை மணிநேரம் ஆனது. அந்த இடைப்பட்ட நேரத்தில் குழந்தைகளும் மற்ற மக்களும் எந்த அளவு மனவேதனையையும், துன்பத்தையும் கடந்திருப்பார்கள் என்பதைக் கணித்துப் பார்க்க முடியும்.

அவர்களுக்கு முன் அவர்களின் பெரியவர்கள் ஷஹீத் ஆக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். பள்ளிவாசலிருந்து வெளியேறி தீவிரவாதிகள் உடனடியாக ஓடிவிடவில்லை. மாறாக, வெகுநேரம் வரை மஹ்தியாபாதிலேயே இருந்தார்கள். மேலும், ஆயுதம் ஏந்திய நபர்கள் பள்ளிவாசலில் இருந்த மக்களைப் பார்த்து, நீங்கள் அனைவரும் அஹ்மதிய்யத்தை விட்டு விடுவதே நல்லது. நாங்கள் மீண்டும் வருவோம். நீங்கள் அஹ்மதிய்யத்தை விடவில்லை என்றாலோ அல்லது யாராவது மீண்டும் பள்ளிவாசலைத் திறக்க முயற்சி செய்தாலோ நீங்கள் அனைவரும் கொல்லப்படுவீர்கள் என்று மிரட்டவும் செய்திருக்கிறார்கள்.

இந்த மஹ்திஆபாத் ஜமாஅத் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இதன் அறிமுகம் என்ன? இது குறித்து இவர்கள் எழுதுகிறார்கள்:

1998 ஆம் ஆண்டின் கடைசியில் இங்கு முறையாக மிஷன் ஆரம்பிக்கப்பட்டது. ஜமாஅத் வேகமாக வளர்ந்தது. 1999 இல் தக்னே வால் என்ற ஒரு கிராமத்தின் பெரும்பான்மையினர் அஹ்மதிகளாக ஆகிவிட்டார்கள். இவ்விடத்தில் ஒரு களங்கமற்ற ஜமாஅத் உருவாகிவிட்டது. இந்த கிராமத்தின் இமாம் அல்ஹாஜ் இப்ராஹீம் பித்காஹ் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் அந்தப் பகுதியில் மிகப் பெரிய வஹாபி இமாமாக இருந்தார்கள். இவர்கள் மிகவும் ஆய்வு செய்த பிறகு, பைஅத் செய்தார்கள். பைஅத் செய்த பிறகு, ஓர் உத்வேக மிக்க இறைவன்பால் அழைப்பவராக ஒரு துணிச்சலான முரப்பியாக வீரமான சிப்பாயாக முன் வந்தார்கள்.

இவர்கள் இதையும் கூறினார்கள். நான் அதைப் பற்றி முதலில் கூறவில்லை. அவர்கள் பைஅத் செய்தபோது, இவர்களின் நண்பர்களாக இருந்த சில ஆலிம்கள் இவர்களிடம், நீ ஏன் ஏற்றுக் கொள்கிறாய் என்று கேட்டார்கள். அதற்கு இவர்கள் கூறினார்கள்:

நான் தங்கத்தைப் பார்த்துவிட்டேன். அல்லாஹ்வும் அதற்கான கட்டளையையும் வழங்கியுள்ளான்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நபிமொழிகளும் நிறைவேறுகின்றன; விஷயங்களும் நிறைவேறி வருகின்றன. திருக்குர்ஆன் அதற்கு சாட்சி பகர்கிறது அவ்வாறிருக்க இப்போது நான் அதனை நிராகரித்து இழப்பிற்குரியவனாக இருப்பது எப்படி சாத்தியமாகும்?

எவ்வாறு இருப்பினும், இமாம் சாஹிப் அவர்கள் மிகவும் புத்திசாலியான மனிதராக இருந்தார்கள். அந்த கிராமத்தின் அனைத்து மக்களும் தமாஷிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். தமாஷிக் மொழி பேசுபவர்கள். தமாஷிக் மக்களின்

எண்ணிக்கை இரண்டு லட்சம் வரை இருப்பதாக கூறப்படுகிறது. இவர்கள் புர்கினாஃபாஸ்,நைஜர், மாலி மற்றும் அல்ஜீரியாவில் காணப்படுகிறார்கள். 99.9 சதவிகிதம் பேர் முஸ்லிம்கள் ஆவர். அதிகப்படியான தமாஷிக்கினர் வஹாபி கொள்கை உடையவர்கள்.

தமாஷிக் மக்களில் அஹ்மதி ஆனவர்கள் அதிகம் பேர் இல்லை. எனினும், புர்கினாஃபாஸ்வில் மஹ்திஆபாதின் தமாஷிக் வாசிகள் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதில் முந்திச் சென்றுவிட்டார்கள். தற்போது அவர்கள் இவ்வளவு பெரிய தியாகத்தை செய்து தமது ஒரு சிறப்பான அந்தஸ்தையும் பெற்றுவிட்டார்கள்.

2004 -ல் இந்தப் பகுதியில், மிகப் பெரும் தங்கக் குவியல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே, சுரங்கக் கம்பெனிகள் அந்த கிராமத்தின் குடியிருப்புக்கு அருகிலேயே ஒரு புதிய இடத்தில் வீடுகளைக் கட்டித் தந்தார்கள். அங்கு இடம் பெயர்ந்து செல்லுமாறு கூறினார்கள். இடம் பெயர்ந்த அந்த மக்களின் பெரும் எண்ணிக்கை அஹ்மதிகளுடையதாக இருந்தது. ஒரு சில மற்ற மக்களும் இருந்தனர். புதிய கிராமம் உருவானது. அது கிட்டத்தட்ட அஹ்மதிகளுடைய கிராமமாகவே இருந்தது.

இந்த கிராமத்திற்கு அந்தப் பழைய பெயரை வைக்கக் கூடாது என்று இப்ராஹீம் சாஹிப் ஆலோசனை வழங்கினார்கள். எனவே அவர்கள் இந்த கிராமத்திற்கு ஏதாவது பெயர் வையுங்கள் என்று எனக்கு எழுதினார்கள். பிறகு, அதற்கு மஹ்திஆபாத் என்று பெயர் சூட்டப்பட்டது. 2008-ல் IAAAE யின் கீழ் மாடல் கிராமமாகவும் ஆக்கப்பட்டது. தண்ணீர் மட்டும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டது.

இது புர்கினாஃபாஸ்வில் இன்னும் கூறுவதாயின், உலகம் முழுவதிலுமான முதல் மாடல் வில்லேஜ் ப்ராஜக்ட்டாக இருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு மின்சாரம், தண்ணீர் மற்றும் தையல் பள்ளிக்கூடம் போன்ற வசதிகள் வழங்கப்பட்டன.

அவர்கள் அனைவரின் நல்லடக்கம் பற்றி அவர்கள் தம் அறிக்கையில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

தீவிரவாதிகள் பள்ளிவாயிலில் ஒன்றரை மணி நேரம் செலவழித்து விட்டு எந்த அளவு அச்சத்தின் சூழலை உருவாக்கியிருந்தார்கள் என்றால், எந்த இடத்தில் ஷஹாதத்கள் நடந்தனவோ அதே இடத்திலேயே ஷஹீத்மார்களின் உடல்கள் இரவு முழுவதும் இருந்தன. ஏனெனில், தீவிரவாதிகள் கிராமத்தை விட்டு வெளியே சென்றிருக்கவில்லை. எவராவது உடலைத் தூக்கிச் சென்றால் அவரும் கொல்லப்படுவதற்கான அச்சம் இருந்தது.

அருகிலேயே இராணுவ முகாம் இருந்தது. இந்த சம்பவத்தைப் பற்றி அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. ஆனால் அங்கிருந்தும் யாரும் வரவில்லை. மேலும் பாதுகாப்புத் துறையின் எந்த நபரும் காலை வரை வரவில்லை. ஷஹீத்மார்கள் ஜனவரி 12 அன்று காலை 10 மணிக்கு மஹ்திஆபாதில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அவர்களின் ஒவ்வொருவரின் அறிமுகத்தையும் இப்போது நான் சுருக்கமாக கூறுகின்றேன்.

இமாம் அல்ஹாஜ் இப்ராஹீம் பீதீகாஹ் சாஹிப் அவர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது. ஷஹாதத்தின்போது அன்னாருக்கு 68 வயதாக இருந்தது. கல்வி சம்பந்தமாக சவூதி அரேபியாவிலும் தங்கியிருந்தார்கள். தமாஷிக் மொழியின் மிகப் பெரும் அறிஞராக இருந்தார்கள். அந்த மொழியில் திருக்குர்ஆன் விரிவுரையாளராகவும் இருந்தார்கள். அன்னார் 1999-ல் பைஅத் செய்தார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் இமாம் இப்ராஹீம் பீதீகாஹ் அவர்கள் பல கிராமங்களின் தலைமை இமாமாக இருந்தார்கள். அந்த மண்டலத்தின் இதர அறிஞர்கள் அன்னாரிடம் வந்து அமர்வதையும், அறிவை பெருக்கிக் கொள்வதையும் தமது மேன்மையாகக் கருதி வந்தார்கள்.

எனவே, ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் ஒருமுறை பகுதி முழுவதிலிருந்தும் முஅல்லிம்மார்கள் மற்றும் இமாம்கள் அன்னாரிடம் வந்து தங்கி, பலன் பெறுவார்கள். இந்த எண்ணிக்கை 500 வரையும் எட்டி விடும். மேலும், ஒரு வாரம் வரை தங்குவார்கள். அந்தப் பகுதியின் அறிஞர்கள் மற்றும் இமாம்களின் ஆண்டு சந்திப்பு அன்னாருடன் நிகழ்ந்து வந்தது என்று கூறலாம்.

அன்னாரின் மாணவர்கள் கூறுகின்றார்கள்:

''இப்போது உண்மை வெளிப்படவில்லை. ஏனெனில், உண்மை மற்றும் சத்தியத்தை ஏற்பவர்கள் சிலரே இருப்பார்கள். எவ்வாறு நூற்றுக்கணக்கில் இந்த இமாம்கள் என்னிடம் வந்து அமர்கிறார்கள், வெளிப்படையில் ஒருவர் மற்றவரை முஸ்லிம்கள் என்று நினைக்கின்றனர். ஆனால், உண்மை வெளிப்படும்போது அப்போது ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் குறைவாகவே எஞ்சியிருப்பார்கள். இந்த மக்கள் என்னை விட்டும் எழுந்து சென்று விடுவார்கள்" என்று அந்த நாட்களிலும் இமாம் சாஹிப் அவர்கள் பெரும்பாலும் கூறிவந்தார்கள்.

நன்மை இருந்தது. இறையச்சம் இருந்தது. அறிவு இருந்தது. எனவே, காலத்தின் நிலைமைக்கு ஏற்ப உண்மை வெளிப்பட உள்ளது என்பதை கணித்துவிட்டார்கள்.

அதற்குப் பிறகு, எப்பொழுதும் நபிமார்களின் எதிரிகளின் வழக்கமாக இருந்து வந்துள்ளது போன்று இந்த மக்களும் எதிர்ப்பார்கள்.

எவ்வாறு இருப்பினும், எப்பொழுது உண்மை வந்தடைந்தாலும் நான் ஏற்க வேண்டும் என்று அன்னார் உள்ளத்தில் ஏற்றிருந்தார்கள்.

1998-ல் டோரீயில் முறையாக அஹ்மதிய்யா மிஷன் நிறுவப்பட்டது. அப்போது இமாம் இப்ராஹீம் அவர்கள் வரையும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியின் எதிரொலி சென்று சேர்ந்தது. தப்லீக் பணிகளுக்கு இடையில் ஒரு சந்தையில் அல்ஹாஜ் பீதீகாஹ் சாஹிப் அவர்கள் முதன் முறையாக அஹ்மதிய்யத்தின் பெயரைக் கேள்விப்பட்டார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள் என்று அஹ்மதிகள் கூறுகின்றார்கள்; மஹ்தி தோன்றிவிட்டதாகவும் கூறுகின்றார்கள் என்பது அன்னாருக்கு அப்போது தெரிய வந்தது.

எனவே இப்ராஹீம் பீதீகாஹ் சாஹிப் ஏழுபேர் கொண்ட ஒரு குழுவை அழைத்துக் கொண்டு உண்மையைத் தேடி டோரீ மிஷன் ஹவுஸ்க்கு வருகை தந்தார்கள். மிகவும் ஆய்வு செய்த பிறகு, அன்னார் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். தம் மண்டலத்தில் முதல் அஹ்மதி ஆகுவதற்கான கண்ணியத்தை அன்னார் பெற்றார்கள்.

**இவர்கள் ஏழை மக்கள்; இவர்களுக்கு பேராசை காட்டி பைஅத் செய்ய வைத்துவிடுகிறார்கள்; இவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்று எதிரிகள் கூறுகின்றனர் அல்லவா? இந்த ஷஹீதுகள் அவர்களின் வாயை அடைத்துவிட்டார்கள். புரிந்து கொண்டு உண்மையை ஏற்றார்கள். பின்னர், தியாகத்துக்கும் உயர்தரமான உதாரணத்தை நிலைநாட்டினார்கள்.**

எவ்வாறு இருப்பினும், இப்ராஹீம் சாஹிப் அவர்களைப் பற்றி மேற்கொண்டு எழுதப்பட்டுள்ளது. முன்னரும் கூறப்பட்டுவிட்டது. அதாவது, ஜமாஅத்தின் ஒரு வீரமான போர் வீரராக அன்னார் இருந்தார்கள். அச்சமற்றவராக இறைவன் பால் (மக்களை) அழைப்பவராக அன்னார் இருந்தார்கள். உண்மையான பொருளில் ஒரு அர்ப்பணிப்பு மிக்க அஹ்மதியாக இருந்தார்கள். அன்னாரின் தப்லீக் முயற்சிகளால் பகுதி முழுவதிலும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்து விட்டது. பல ஜமாஅத்துகள் உருவாகிவிட்டன.

அன்னார் அதிகமதிகமாக ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் அன்னாரின் கொள்கைப்படி வஹாபிகளைத் தவிர, மற்ற அனைத்து பிரிவினரும் காஃபிர்களாக இருந்தார்கள். டி.வி பார்ப்பது, கால்பந்து விளையாடுவது அல்லது பார்ப்பது, பள்ளிக்கூடம் செல்வது,

புகைப்படங்கள் எடுத்துக் கொள்வது ஆகிய அனைத்தும் அன்னாரின் பார்வையில் ஹராமாக இருந்தன. அவ்வாறுதான் வஹாபிகளின் கொள்கை இருக்கிறது.

ஆனால், பின்னர் அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு இந்த வறண்ட சிந்தனைகளை விட்டும் தம்மை விலக்கிக் கொண்டார்கள். மேலும், உண்மை என்ன? என்று மக்களுக்கும் புரிய வைத்தார்கள். 2000 -ஆம் ஆண்டில் இங்கு யூ.கேவில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலத்தில் அன்னாருக்கு ஜல்சாவிலும் கலந்து கொள்ளும் நற்பேறு கிடைத்தது. அன்னார் தப்லீக்கில் பைத்தியமாக இருந்தார்கள்.

அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்பும் (மக்களிடத்தில்) தாக்கமும், செல்வாக்கும் கொண்டவராக இருந்தார்கள். மேலும், பல கிராமங்களின் தலைமை இமாமாகவும் இருந்தார்கள். அது குறித்து கூறப்படுகிறது: அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு தம்மை தப்லீக் பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டார்கள். அன்னாருக்கு வேறு எதைப் பற்றியும் கவலையே இல்லாதது போன்று இருந்தது.

அன்னார் தப்லீக்கிற்கான வாட்ஸ்அப் குழுமங்களை உருவாக்கி வைத்திருந்தார்கள். அதில் குறிப்பாக, தமாஷிக் மக்களுக்காக ஒரு குழுமம் இருந்தது. அந்தக் குழுமத்தில் மாலி, நைஜர், கானா, சவூதி அரேபியா, லிபியா, த்யூனுஸ், ஐவரிகோஸ்ட் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் இணைந்திருந்தார்கள்.

தொடர்ச்சியாக அவர்களுக்கு தப்லீக் செய்து வந்தார்கள். இரவு பகலாக ஆடியோ தூதுச் செய்திகளைப் பதிவு செய்து அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். இரவு, பகலாக அந்தப் பணியிலேயே மூழ்கியிருப்பார்கள். எதிரிகள் அன்னாருக்கு ஏசிபேசியும் பதில் அனுப்புவார்கள். எவ்வாறு இருப்பினும், அந்த எதிர்ப்பும் இருந்து வந்தது. அன்னாருக்கு கொலை மிரட்டலும் விடுத்து வந்தார்கள்.

ஆனால், அன்னார் ஒருபோதும் எவரிடமும் கோபத்தோடு பேச மாட்டார்கள். மாறாக, கொலை மிரட்டல் விடுக்கக்கூடியவர்களிடம், வாருங்கள்! உங்களுக்கு நான் பயணச் செலவு கொடுக்கின்றேன். என்னைக் கொல்லுங்கள் என்று கூறுவார்கள்.

அன்னார் முபல்லிக்மார்கள் மற்றும் முஅல்லிம்மார்களிடம் இவ்வாறு கூறிவந்தார்கள்:

தப்லீக் செய்ய வேண்டும். நிலைமை மோசமாக இருக்கின்றது. எனவே நாங்கள் தப்லீக் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ள முடியாது என்பது சாக்குப் போக்காகும். கூறுகின்றார்கள்: நிலைமை மோசமாகும்போது, ஊடகம் மூலமாக தப்லீக் செய்யுங்கள். எவரிடமாவது தொலைபேசியில் நெட் பேக்கேஜ் செய்வதற்கு பணம் இல்லையென்றால் என்னிடம் வாங்கிக் கொள்ளுங்கள். சமூக ஊடகங்களில் குரூப்களை உருவாக்குங்கள். வீட்டில் அமர்ந்து கொண்டு தப்லீக் போரில் பங்கு பெறுங்கள்.

அன்னாருக்கு ஒரு பித்து இருந்தது. ஓர் ஆர்வம் இருந்தது.

அங்கு முரப்பியாக இருந்துள்ள நாஸிர் சித்தூ சாஹிப் கூறுகின்றார்கள்:

1997-இல் புர்கினோஃபாஸு சென்றேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இறைவன் பால் அழைக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்திருந்தார்கள்.

ஆக, அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு மொழி தெரியாது. எனவே, திட்டம் வகுப்பதில் மூன்று மாத காலம் ஆகிவிட்டது. அதற்கு பிறகு கிராமங்களுக்குச் சென்று சுற்றுப் பயணம் செய்தேன். அன்னாரிடம் அந்த கிராமத்தின் இமாமிடமும் சென்றேன். அன்னாருக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள்; மஹ்தி, மஸீஹ் வருகை தந்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்ததும் இப்ராஹீம் பதீகாஹ் சாஹிப் அவர்கள் ஏழு பேருடன் நமது டோரீயின் மிஷன் ஹவுஸிற்கு வந்துவிட்டார்கள். அங்கு கேள்வி பதில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்னார் மூன்று நாட்கள் என்னுடன் இருந்தார்கள். அந்த மூன்று நாட்களும் அன்னாரும் தூங்கவில்லை; என்னையும் தூங்கவிடவில்லை. அதற்கு பிறகு, அந்த மக்கள் சென்று விட்டார்கள். தினமும் காலையிலிருந்து மாலை வரை உரையாடல் நடைபெற்று வந்தது. அடுத்த வாரம் மீண்டும் வந்தார்கள். தம் புதிய இமாமை உடன் அழைத்து வந்தார்கள். ஆய்வின் இந்தத் தொடர் மூன்று மாதங்கள் வரை தொடர்ந்தது.

பெரும்பாலான கேள்விகளுக்கு அன்னாருக்கு பதில்கள் கிடைத்திருந்தன. ஆனால், அன்னார் ஒருபோதும் அஹ்மதிய்யத்தில் நுழைவதற்கான எண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. கூறுகின்றார்கள்: எவ்வாறு இருப்பினும், நான் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு துஆவிற்காக எழுதி வந்தேன். ஒருநாள் இமாம் சாஹிப் வந்தார்கள். பைஅத் படிவத்தை நிரப்பினார்கள். நான் அன்னாரிடம், தொடர்ந்து வந்து கொண்டிருந்த மற்ற மக்கள் எங்கே? அவர்கள் எப்போது ஏற்றுக் கொள்வார்கள்? என்று கேட்டேன். அதற்கு, அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், நான் எல்லாருக்கும் முதலாக அஹ்மதிய்யத்தில் நுழைய விரும்பியிருந்தேன். எனவே நான் வந்துவிட்டேன் என்று அன்னார் கூறினார்கள். கிலாஃபத்துடனும் அளவற்ற நன்றியுணர்வின் தொடர்பு இருந்தது.

புர்கினாஃபோஸுவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

ஏறக்குறைய 45 கிராமங்கள் அன்னாரின் தாக்கத்தின் கீழ் இருந்தன. அன்னார் ஹஜ் செய்தார்கள். அங்கிருந்து கல்வி பயின்றார்கள். அரபி நன்றாக அறிந்திருந்தார்கள்; பேசி வந்தார்கள். அந்த முழு பகுதியிலும் நிறைய தப்லீக் செய்தார்கள். சைக்கிளில் செல்வார்கள். அல்லாஹ்வின் அருளால் அந்தப் பகுதியில் பல மக்களை அஹ்மதிய்யத்தின் ஒளியால் பிரகாசமடையச் செய்தார்கள். அன்னார் மூலமாக அந்தப் பகுதியின் பெரும், பெரும் அறிஞர்கள் அஹ்மதிய்யத்தில் நுழைந்தார்கள். அந்தப் பகுதியின் பெரும்பாலான ஜமாஅத்துகள் அன்னாரின் தப்லீக் காரணமாக உருவாகின. எப்பொழுது லண்டன் செல்ல நேர்ந்தாலும் காலத்தின் கலீஃபாவின் உடல்நிலை எப்படி இருக்கிறது? என்று அன்னார் எப்போதும் விசாரிப்பார்கள். மிகவும் அன்பை வெளிப்படுத்தி வந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த அன்புக்கான ஓர் உதாரணம் இதுவே ஆகும். அதாவது, mta-வில் பிள்ளைகளோடு என் வகுப்பு நடைபெறும்போது, உருது மொழி முற்றிலும் அறியாதபோதும் புரிவது போன்று மிகவும் ஈடுபாட்டுடன் பார்த்து வந்தார்கள். நான் இங்கு இந்த சபையில் அமர்வதும் அதைப் பார்ப்பதுமே ஈமானிற்கும் அதில் முன்னேற்றம் அடைவதற்கும் பெரிதும் காரணியாக உள்ளது என்றே கூறிவந்தார்கள்.

விருந்தோம்பல் செய்யக்கூடியவராகவும், மௌனமான இயல்புடையவராகவும் அன்னார் இருந்தார்கள். ஆனால், ஜமாஅத்துக்காக பேச வேண்டியது வரும்போது பின்னர் மிகவும் உணர்ச்சி பொங்க பேசி வந்தார்கள். ஒரு முழுமையான முபல்லிக் ஆக

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

இருந்தார்கள். அஹ்மதி அல்லாதவர்களுடன் தனிப்பட்ட முறையிலும் கூட்டமாகவும் பல விவாதங்களையும், கேள்வி பதில்களையும் அன்னார் மேற்கொண்டுள்ளார்கள்.

அடுத்து, அங்குள்ள மற்றொரு முரப்பி முஹிப்புல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்:

நான் இந்த சான்றோர்களை தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தேன். ஏனெனில், நான் அங்கு பெரும்பாலும் சென்று வந்தேன். கிலாஃபத்துடன் அளவற்ற அன்பு செலுத்தக்கூடிய, விருந்தோம்பல் செய்யக்கூடிய நன்றியுணர்வுள்ள மக்களாக அவர்கள் இருந்தார்கள்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்:

இளைஞர்கள் அனைவரும் பகல் முழுவதும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இந்தப் பெரியவர்கள் பள்ளிவாசலுக்கு முன் அமைக்கப்பட்டிருந்த குடிசையில் அமர்ந்து mta பார்த்து வந்தார்கள். இவர்கள் ஷஹீதான உடனேயே எனக்கு ஓர் இளைஞரிடமிருந்து இவ்வாறு ஃபோன் வந்தது: அதாவது எங்கள் பெரியவர்கள் ஷஹீத் ஆக்கப்பட்டுவிட்டனர். நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விலகிவிட்டால் நாங்கள் உங்களை விட்டுவிடுவோம் என்று அவர்களிடம் கூறப்பட்டது. ஆனால், அவர்கள் ஷஹாதத்துக்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

மேலும் அந்த இளைஞர் இதைக் கூறினார்: அவர்கள் எங்கள் அனைவரையும் ஷஹீத் ஆக்கிவிட்டாலும் நாங்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விலகப்போவதில்லை. அந்த இளைஞர் கூறினார்: அவர்களோ வெறும் ஒன்பது அன்ஸார் மட்டுமே ஆவார்கள். ஒருவேளை குத்தாம், லஜ்னா என எங்கள் அனைவரையும் ஷஹீத் ஆக்கிவிட்டாலும் கூட நாங்கள் அஹ்மதிய்யத்தை விட மாட்டோம். இன்ஷாஅல்லாஹ்

இந்த ஆன்மாவைத் தான் இந்த ஜமாஅத்தில் இந்த தூய மக்களிடம் அவர்கள் ஏற்படுத்தினார்கள். பெரியவர்களுக்கு தர்பிய்யத் இருக்கும்போது, அவர்களின் முன்மாதிரியும் இருக்கும்போது அந்நிலையில்தான் இளைஞர்கள் மற்றும் பெண்களிடத்தில் உணர்வும் ஈமானும் பிறக்கின்றது.

உள்ளூர் முபல்லிக் மாயிகா தேஜான் சாஹிப் கூறுகின்றார்கள் :

இமாம் இப்ராஹீம் சாஹிப் அவர்களுக்கு கொலை மிரட்டல்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஷஹாதத்துக்கு சில நாட்கள் முன்பு எனக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. இந்த மக்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்று அன்னார் என்னிடம் கூறினார்கள்.

நல்லொழுக்கம் பற்றி அவர்கள் கூறுகிறார்கள்:

தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் மிகவும் நல்ல முறையில் நடந்து வந்தார்கள். எல்லாருடனும் அனுதாபம் கொள்வது அன்னாரின் வழக்கமாக இருந்தது. மற்றவர்களுக்காக தியாகம் செய்வதும் தியாக உணர்வை வெளிப்படுத்துவதும் வெளிப்படையாகத் தெரியும் பண்புகளாக இருந்தன. பகுதியின் மிகவும் கண்ணியத்திற்குரியவராக அன்னார் இருந்தார்கள். மக்கள் அன்னாருக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். இப்ராஹீம் சாஹிப் அவர்கள் ஏதாவது தீர்மானம் எடுத்தால் அல்லது ஏதாவது கூறினால் மக்கள் அதற்கு மதிப்பளிப்பார்கள். அதை ஏற்பார்கள்.

அன்னாருடைய மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். அவர்களில் சிலர் மற்ற அண்டை நாடுகளில் இமாமாகவும், முஅல்லிமாகவும் பணிபுரிகின்றார்கள். புர்கினாஃபாஸோ விலும் பலர் முஅல்லிமாகவும், உள்ளூர் மிஷனரியாகவும் பணிபுரிகின்றார்கள்.

அடுத்து, கூறுகின்றார்கள்: நன்மை, இறையச்சம் மற்றும் நன்மையில் ஒருவரையொருவர் முந்துதல் ஆகியவற்றில் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். ஜமாஅத் மக்களுக்கு எப்போது ஒரு திட்டத்தை எடுத்துக் கூறினாலும் சரி எல்லாரையும் விட முதலில் தாம் அதில் பங்கு பெறுவார்கள்.

ஏதாவது பொருள் தியாகம் பற்றிய திட்டமாக இருந்தால், எல்லாருக்கும் முதலாக தாமே கலந்து கொள்வார்கள். ஜமாஅத் பணிகளில், ஜல்ஸாக்களில், இஜ்திமாக்களில் மற்றும் இதர மும்முரமான பணிகளில் ஒருபோதும் பின்வாங்கியதில்லை.

ஐவேளை தொழுகைகளையும் பள்ளிவாசலில் நிறைவேற்றுவார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை முறையாக பேணி வந்தார்கள். எப்பொழுதாவது ஏதாவது ஒரு ஜமாஅத் பணியில் அன்னார் கலந்து கொள்ளவில்லை என்றால், அதன் பொருள் ஒன்று அன்னார் நோய்வாய்ப்பட்டிருப்பார்கள் அல்லது பயணத்தில் சென்றிருப்பார்கள். ஜமாஅத் பணிகளில் கலந்து கொள்வதற்காக ஒருபோதும் செலவுகளைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள். அன்னார் இரண்டு திருமணங்கள் செய்திருந்தார்கள். அவர்கள் மூலமாக அல்லாஹ் அன்னாருக்கு 11 பிள்ளைகளை வழங்கினான்.

முரப்பி காலித் மஹ்மூத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

இந்த மக்கள் களங்கமற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வால் திளைத்திருந்தார்கள். கிலாஃபத் மீது பித்து கொண்ட மாய்ந்து போகும் அஹ்மதிகளாக இருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: 2008-ல் நான் கானாவுக்குச் சுற்றுப் பயணம் சென்றபோது, அது கிலாஃபத் நூற்றாண்டு வருடமாக இருந்தது. நான் கானாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். அங்கு ஜல்ஸாவுக்குச் சென்றேன். அப்போது புர்கினாஃபாஸோ மற்றும் மாலி போன்ற இடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான அஹ்மதிகள் என்னை சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் கானா ஜமாஅத் விருந்தோம்பல் மற்றும் தங்கும் வசதிக்கான ஏற்பாடுகளையும் மிகவும் நன்றாக செய்திருந்தது.

ஆனால், அவ்வாறிருந்தும் டோரீயிலிருந்து வந்திருந்த சில மக்களுக்கு (இவர்களும் அவர்களில் சிலராக இருந்தார்கள்) உணவு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுவிட்டது அல்லது உணவு கிடைக்கவில்லை. பிறகு, வெகு நேரத்திற்கு பிறகு இரவு கடையிலிருந்து உணவு வரவழைக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. எனவே அவர்கள் என்னை சந்தித்தபோது, நான் அந்த முரப்பி சாஹிப் அவர்களிடம், என் சார்பாக இவர்களிடம் வருத்தம் தெரிவித்து விடுங்கள். மேலும் அவர்களை மனம் மகிழச் செய்யுங்கள் என்று கூறினேன்.

அங்கு அவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒரே சமயத்தில் மற்றவர்களோடு சேர்ந்து இவ்வாறு கூறினார்கள்:

நாங்கள் இங்கு காலத்தின் கலீஃபா அவர்களைப் பார்ப்பதற்காக, சந்திப்பதற்காக வந்திருந்தோம். அன்னாரை பார்த்துவிட்ட பிறகு, சந்தித்துவிட்ட பிறகு எங்கள் களைப்பும், பசியும் தீர்ந்துவிட்டது. எங்களுக்கு எந்த முறையீடும் இல்லை. இன்னும் சொல்வதென்றால் நாங்கள் பரஸ்பரம் அமர்ந்து அந்த சந்திப்பை பற்றியே பேசுகிறோம். அதிலிருந்து ஆனந்தம் அடைகின்றோம்.

எவ்வாறு இருப்பினும், இவ்வளவு தூரம் பயணம் செய்து வந்திருக்கிறார்கள். பல பேர் அப்போது சைக்கிளிலும் வந்திருந்தார்கள். அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லையே என்று அப்போது எனக்கும் கவலையாக இருந்தது. உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆனால், மறுபுறம் அவர்களின் களங்கமற்ற தன்மையும், நன்றியுணர்வும் எப்படி இருந்தது என்றால், அதனால் (நான்) வியந்து போனேன். அப்போதும் எனக்கு அவர்களின் இந்தத் தூதுச் செய்தியே கிடைத்தது. இந்த மக்கள் உறுதியான ஈமான் கொண்டவர்கள் என்று நான் அப்போதும் வியப்படைந்திருந்தேன்.

முஅல்லிம் அல்ஹாஜ் மஹ்மூத் டேக்கூ சாஹிப் கூறுகின்றார்கள்: ஷரீஃப் ஓதே சாஹிப் பெனினுக்கு சுற்றுப் பயணம் வந்தபோது இமாம் சாஹிப் புர்கினாஃபாஸோவில் இருந்து பேருந்தில் பயணம் செய்து ஆயிரம் கி.மீ பயண தூரத்தைக் கடந்து அதிகாலை மூன்று மணிக்கு அங்கு சென்றடைந்தார்கள். இரவு முழுவதும் பயணம் செய்தார்கள்.

களைப்படையச் செய்யக்கூடிய 30 மணி நேர பயணமாக அது இருந்தது. அங்கு பாதைகளும் சரியாக இல்லை. அன்னார் மிகவும் உற்சாகத்துடனும், களிப்புடனும் இருந்தார்கள்.

மேற்கொண்டு நீண்ட பயணம் செய்ய வேண்டியிருந்தது. அதையும் அன்னார் அவர்களுடன் இணைந்து செய்தார்கள். எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்கள். அன்னாருக்கு ஜமாஅத் தொண்டுகள் ஆற்றுவதற்கான ஓர் உத்வேகம் இருந்தது. பெனினில் பள்ளிவாசல்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், இதைப் பாருங்கள்! இதுவும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு சான்றாகும் என்று கூறிவந்தார்கள்.

இதே போன்று அஹ்மதியல்லாதவர்களுடன் நடைபெற்று வந்த விவாதங்களில் அன்னார் அரபு மொழியில் சொற்பொழிவும் ஆற்றியுள்ளார்கள். கருத்துச் செறிவு மிக்க சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார்கள். மவ்லவிகள் ஷரீஃப் ஓதே சாஹிப் அவர்களுடனும் விவாதம் செய்தார்கள். அப்போது அவர்கள் ஏதோ சில தவறான விஷயங்களைப் பேசிய போது அன்னார் கோபத்தில் எழுந்து பதில் கூற முற்பட்டார்கள். அன்னாரை அமைதிப்படுத்தியபோது உடனடியாக அமர்ந்து விட்டார்கள். பிறகு, நீங்கள் எங்களை முஸ்லிம்களாகக் கருதினால் எங்களுக்கு பின்னால் தொழுங்கள் என்று அஹ்மதியல்லாதவர்கள் கூறினார்கள். அப்போது அன்னார் எழுந்து நின்று இவ்வாறு பதில் கூறினார்கள்: எவர்கள் எங்களைக் காஃபிர்கள் என்று கூறுகின்றார்களோ, மேலும் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதில்லையோ அத்தகைய மக்களாகிய உங்கள் பின்னால் நின்று நாங்கள் தொழுவது எப்படி சாத்தியமாகும்? ஒன்று நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் காலத்தின் இமாம் என்று ஏற்றுக் கொள்ளுங்கள். நாங்கள் தொழுகிறோம் என்று அன்னார் கூறினார்கள்.

பெனினின் பணி ஓய்வு பெற்ற ஓர் உள்ளூர் முஅல்லிம் கூறுகிறார்: காலத்தின் கலீஃபாவுடன் அன்பு செலுத்துவதற்கான ஓர் உயிருள்ள வடிவமாக அன்னார் இருந்தார்கள். அன்னார் கூறிவந்தார்கள்: எனக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி பாகிஸ்தானி முபல்லிக் வழங்கினார். அந்த நாளில் இருந்தே நான் அஹ்மதி ஆகியிருந்தேன். உலகின் வெற்றி கிலாஃபத் அமைப்புடனேயே இணைந்திருக்கிறது; இதுவே அசல் வழியாகும் என்பதை நான் கற்றுக் கொண்டேன். மரணிக்கும் நொடி வரை இதில் நான் நிலைத்து நிற்பேன்.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்: அன்னார் கூறியதை உண்மையில் அன்னார் செய்து காட்டினார்கள்.

பிறகு, பெனினின் உள்ளூர் முஅல்லிம் ஈஸா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நீண்ட காலமாக அன்னாருடன் எனக்கு தொடர்பு இருந்தது. எத்தகைய ஓர் அஹ்மதியாக அன்னார் இருந்தார்கள் என்றால், அன்னாருக்கு யாருடனும் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்கவில்லை. அன்னார் உண்மையான அஹ்மதியாக இருந்தார்கள். மேலும், அன்னார் எத்தகைய அஹ்மதி என்றால், எல்லா அமல்களிலும் முன்னால் இருந்தார்கள். தப்லீக் செய்வதில் சந்தா கொடுப்பதில் என ஒவ்வொரு விஷயத்திலும் முதலிடத்தில் இருந்தார்கள். இந்தக் காரணத்தினாலேயே மற்ற எட்டு அன்ஸார் பெருமக்களும் கூட அன்னாரை பின்தொடர்ந்து லெப்பைக் கூறியவாறு தம் உயிர்களை இறைவனுக்கு முன்னால் அர்ப்பணிப்பவர்களாக ஆகிவிட்டனர்.

புர்கினாஃபாஸுவின் ஜாமிஆ முதல்வர் எழுதுகின்றார்கள்: ஒருவர் ஒரு கனவைப் பார்த்தார். அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஜமாஅத்தின் அமீர் சாஹிப் அவர்ளுக்கு இவ்வாறு எழுதி அனுப்பினார்கள்: கனவு அருளுக்குரியது. அதன் பொருள், நாட்டின் மண் உண்மையை ஏற்பதற்கு வளமாக உள்ளது. எனது சுற்றுப் பயணத்திற்கு பிறகு, உண்மையை ஏற்றுக் கொண்டு ஒளியால் பிரகாசிக்கும். இறைவன் அவ்வாறே செய்வானாக!

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் சுற்றுப் பயணம் அங்கு நடைபெறவில்லை என்று நான் கருதுகிறேன். எவ்வாறு இருப்பினும், 2004-ல் நான் சுற்றுப் பயணம் சென்றேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்கு பிறகு, புர்கினாஃபாஸுவின் மண்ணில் அஹ்மதிய்யத்தின் விதை விதைக்கப்பட்டுள்ளது. அது விரைவாக நிரந்தர கனி தரும் என்று எனக்கு முழுமையாக நம்பிக்கை உள்ளது என்று தாங்களும் எழுதினீர்கள்.

உண்மையில், புர்கினாஃபாஸு மக்கள் மிகவும் மகத்துவ மிக்கவர்கள் ஆவர். இறைவன் அவர்களை அஹ்மதியத்தின் ஒளியால் பிரகாசம் அடையச் செய்துள்ளான் என்று எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. நான் புர்கினாஃபாஸு ஜமாஅத்தின் மக்களிடம் கண்ட விழிப்புணர்வு வியப்பூட்டக்கூடியதாகும். அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் இந்த சுற்றுப் பயணத்தின் மாபெரும் விளைவுகள் வெளிப்படும். ஜமாஅத் விரைவாக வளர்ச்சியடையும். இன்ஷாஅல்லாஹ். (கடிதம்: மதிப்பிற்குரிய அடினல் வகீலுத் தப்ஷீர் ஸாஹிப் லண்டன், T. 3360, தேதி ஜூன் 19, 1990)

இதை நான் எனது சுற்றுப் பயணத்திற்கு பிறகு அவர்களுக்கு எழுதியிருந்தேன்.

ஆஃப்ரிக்க ஜமாஅத்துகளில் புர்கினாஃபாஸுவின் அஹ்மதிகளில் நான் கண்ட ஒரு சிறப்பான விஷயம் என்னவென்றால், சந்திப்புகளின் போது ஒவ்வொருவரும் என்னை கட்டியணைக்க முயற்சி செய்வர். பிறகு, அந்த மக்களின் அன்பும் காணத் தக்கதாக இருந்தது.

தலைமையாசிரியர் எழுதுகின்றார்கள்: இன்று மஹ்திஆபாதின் களங்கமற்ற மக்கள் அசாதாரண தியாகத்தை செய்து, தாங்கள் எழுதியிருந்த உண்மையில், மிகவும் மகத்துவ மிக்க மக்கள் என்ற சொற்களில் முத்திரை பதித்து விட்டார்கள்.

இரண்டாவது, அல்ஹஸன் ஆஃகு மாலீ ஆயல் சாஹிப் அவர்கள் ஆவார்கள். அன்னாருக்கு ஷஹாதத்தின்போது வயது 71 ஆகும். தொழிலைப் பொருத்த வரை, விவசாயி ஆவார்கள். 1999 -ல் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். கிராமத்தின் ஆரம்ப அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். இப்ராஹீம் சாஹிப் அவர்களுடன் இணைந்து டோரீ மிஷனுக்கு சென்ற ஆய்வுக் குழுவில் அன்னாரும் இருந்தார்கள். அன்னார் பைஅத் செய்ததிலிருந்து களங்கமற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வில் முன்னேறிக் கொண்டே சென்றார்கள்.

கிலாஃபத்துடன் மிகவும் களங்கமற்ற தொடர்பு கொண்டிருந்தார்கள். ஜமாஅத்தான தொழுகையை பேணுபவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்துவதிலும் தமது குடும்பத்திற்குத் தமக்குப் பின் ஒரு நல்ல முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். ஒட்டுமொத்தமாக அன்னார் ஜமாஅத்திற்காக உயிர், செல்வம் மற்றும் நேரத்தை செலவிட்டது அசாதரணமான விஷயம் ஆகும். அன்னார் புர்கினாஃபாஸுவின் நான்கைந்து மொழிகளை அதாவது பல்வேறு உள்ளூர் மொழிகளை பேசி வந்தார்கள். இதன் காரணமாக, அன்னாரின் அன்பர்களின் வட்டம் முழு நாட்டின் ஜமாஅத்துகளில் இருந்தது.

ஜல்சா ஸாலானாவின் சந்தர்ப்பத்தில் பிற மண்டலத்திலிருந்து வருபவர்களுடன் அவர்களின் மொழியை அறிந்திருந்ததன் காரணமாக மிகவும் அந்யோன்யமாக இருப்பார்கள். மக்கள் அன்னாரை அதிகம் நேசிப்பார்கள். அன்னாரின் சபைகளில் அமர்ந்து இன்பமடைவார்கள். ஜமாஅத் தரப்பிலிருந்து ஏதாவது திட்டம் எப்பொழுது அறிவிக்கப்பட்டாலும் அதில் முந்திக் கொண்டு பங்கு பெறுவார்கள்.

கடந்த ஆண்டு ஜமாஅத் தரப்பிலிருந்து வக்ஃபே ஆர்ஸீ செய்யுமாறு கூறப்பட்டது. அப்போது மஹ்திஆபாத் ஜமாஅத்தில் இருந்து எல்லாருக்கும் முதலாக அன்னார் பெயர் கொடுத்தார்கள்.

மஹ்திஆபாத் சம்பவத்தில்

அன்னாருடைய இரட்டை சகோதரர் மதிப்பிற்குரிய ஹுஸைன் ஆஃகு மாலி ஆயில் சாஹிப் அவர்களும் ஷஹீத் ஆகிவிட்டார்கள்.

அடுத்து, ஏற்கனவே கூறப்பட்டது போன்று அன்னாரின் இரட்டையான ஹுஸைன் ஆஃகு மாலி ஆயில் சாஹிப் அவர்கள் ஆவார்கள். அன்னாருக்கும் வயது 71 ஆக இருந்தது. அன்னாரும் 1999-ல் பைஅத் செய்வதற்கான நற்பேறு பெற்றார்கள். தமது கிராமத்தின் ஆரம்ப அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். அல்ஹாஜ் இப்ராஹீம் சாஹிப் அவர்களுடன் டோரீ மிஷன் ஹவுஸிற்கு சென்று ஆய்வு செய்த குழுவினரில் அன்னாரும் ஒருவராக இருந்தார்கள்.

தற்சமயம் மஹ்திஆபாதில் அன்ஸாருல்லாஹ் அமைப்பின் ஸயீமாக தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றுக் கொண்டிருந்தார்கள். அன்ஸார் சகோதரர்களை மிகவும் நல்ல முறையில் ஒருங்கமைக்கும் திறமை கொண்டிருந்தார்கள். அவர்களை ஜமாஅத் நிகழ்ச்சிகள் மற்றும் பணிமும்முரங்களில் செயல்பட வைத்தார்கள். தர்பிய்யத்துக்கான பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த வைத்து வந்தார்கள். பள்ளிவாசலின் தூய்மையையும், இதர இடங்களில் வகாரே அமலையும் செய்ய வைத்து வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். ஐவேளை தொழுகைகளையும் பள்ளிவாசலில் நிறைவேற்றுவதைக் கடைபிடித்து வந்தார்கள்.

முறையாக தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று மஹ்திஆபாத் சம்பவத்தில் அன்னாரின் இரட்டையான சகோதரரும் ஷஹீதானார். ஒரே நாளில் உலகத்திற்கு வந்தார்கள். ஒரே நாளில் உலகை விட்டுச் சென்றார்கள்.

(அடுத்தது) ஹமீது ஆஃகு அப்துர் ரஹ்மான் சாஹிப் ஆவார்கள். அன்னாருக்கு வயது 66 ஆக இருந்தது. தொழில் ரீதியாக அன்னாரும் விவசாயி ஆவார்கள். 1999-ல் அன்னாரும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். உள்ளத்தால் மிகவும் தூய்மையானவராகவும், மிகவும் மென்மையான இயல்பு படைத்தவராகவும் இருந்தார்கள். எப்பொழுதும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களின் முதல் வரிசையில் இணைந்திருந்தார்கள்.

ஏதாவது நிகழ்ச்சியில் வராமல் இருந்தார்கள் என்றால், நிச்சயமாக ஏதாவது தவிர்க்க முடியாத நிர்பந்தமோ அல்லது நோயோ இருக்கும் என்று புரிந்து கொள்ளப்படும். இல்லையென்றால், அன்னார் வராமல் இருக்க மாட்டார்கள். அன்னார் இமாம் இப்ராஹீம் சாஹிப் அவர்களின் உதவியாளர்களில் ஒருவராக இருந்தார்கள். ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருப்பதற்கும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கும் தமது குடும்பத்தினருக்கு வலியுறுத்தி வந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் நன்றியுணர்வான தொடர்பு இருந்தது. அதிகப்படியான நேரத்தைப் பள்ளிவாசலில் கழிப்பார்கள். mta நிகழ்ச்சியைப் பார்த்து வருவார்கள். குறிப்பாக, முறையாகவும் மிகவும் கவனமாகவும் குத்பா கேட்பார்கள்.

(அடுத்து) ஸூலஹ் ஆஃகு இப்ராஹீம் சாஹிப் ஆவார்கள். ஷஹாதத்தின்போது அன்னாருக்கு வயது 67 ஆக இருந்தது. தொழில் ரீதியாக அன்னாரும் விவசாயி ஆவார்கள். ஜமாஅத்தான தொழுகைகளை மிகவும் பேணி வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் துடிப்புள்ள உறுப்பினராக, ஊழியராக இருந்தார்கள். ஜமாஅத்தின் மிகவும் களங்கமற்ற மனிதராக இருந்தார்கள். இப்ராஹீம் சாஹிப் அவர்களின் தோழராகவும், உதவியாளராகவும் இருந்தார்கள்.

அல்லாஹ்வின் அருளினால் ஞானம் பெற்றவராக இருந்தார்கள். மார்க்க மற்றும் அறிவு சார்ந்த உரையாடல்களை நிகழ்த்துவது அன்னாரின் வழக்கமாக இருந்தது. ஜமாஅத்தில் அன்ஸார் உறுப்பினர்கள் மத்தியில் எப்போது அறிவு சார்ந்த உரையாடல் நடைபெற்றாலும் அன்னார் அத்தகைய சபைகளில் காணப்படுவார்கள். மிகவும் மென்மையான மற்றும் ஒழுக்கமான இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள்.

சிறியவர், பெரியவர் என அனைவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்வது அன்னாரின் பண்புகளில் ஒன்றாக இருந்தது. ஜல்ஸா ஸாலானா அல்லது இஜ்திமாவில் செல்லும்போது யாரிடமாவது பயணத்துக்குப் பணம் இல்லை என்பதைப் பார்த்தால் அல்லது குறைவாக இருக்கிறது என்றால், அவரும் கலந்து கொள்ள ஏதுவாக தம் தரப்பிலிருந்து அவருக்கு உதவி செய்து விடுவார்கள்.

இந்நாட்களில் இவ்வாண்டு டோரீ பகுதியிலிருந்து வெளியேறி பயணம் செய்வது மிகவும் துணிச்சலான பணியாக இருந்தது. ஏனெனில், எல்லாப் பக்கமும் தீவிரவாதிகள் தங்களின் தீவிரவாதத்தைப் பரப்பியிருந்தார்கள். ஆனால், அவ்வாறிருந்தும் அனைத்து ஆபத்துகளையும் பார்த்தவாறும் மஹ்திஆபாதிலிருந்து டிசம்பரின் கடைசி வாரத்தில் நடைபெற்ற புர்கினோஃபாஸோவில் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

அடுத்து, உஸ்மான் ஆஃகு சவ்தே சாஹிப் ஆவார்கள். அன்னாருக்கு வயது 59 ஆக இருந்தது. கலப்பற்ற மற்றும் உயிரை அர்ப்பணிக்கும் அஹ்மதியாக இருந்தார்கள். ஜமாஅத்திற்குப் பொருள் மற்றும் நேரத்தை தியாகம் செய்யக்கூடியவராக இருந்தார்கள். கடைசியில் அல்லாஹ் உயிரைத் தியாகம் செய்வதற்கும் நற்பேறு வழங்கிவிட்டான். மஹ்திஆபாதின் பள்ளிவாசலின் கட்டுமானத்தின்போது தண்ணீர் எடுத்து வருவார்கள். கட்டுமானப் பணியில் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு நல்கி வந்தார்கள். அதிகமதிகமாக பங்கு பெற்று வந்தார்கள்.

தொழுகைகளை மிகவும் முறையாக பேணி வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். என்ன சம்பாதித்து வந்தாலும் அதிலிருந்து முதலில் சந்தா தொகையை செலுத்துவிடுவார்கள்.

இத்தகைய சிந்தனை கொண்டிருப்பவர்கள், எதிரிகள் கூறுவது போன்று பணத்தின் மீது ஆசைப்பட்டு பைஅத் செய்கின்றார்களா?

தொழிலின் அடிப்படையில் அன்னார் ஒரு வியாபாரியாக இருந்தார்கள். காலணி விற்கும் வியாபாரத்தை செய்து வந்தார்கள். எவரிடமாவது காலணி வாங்க வசதி இல்லாமல் இருந்தால் அல்லது குறைவான தொகை இருந்தால் அப்போதும் கூட அவரை வெறுமனே செல்ல விட மாட்டார்கள். யாரையும் வெறுங் காலில் திரும்பிச் செல்ல விட்டதில்லை. தொகை இல்லை அல்லது குறைவாக இருக்கிறது என்றால் பரவாயில்லை பிறகு கொடுங்கள் என்று கூறுவார்கள்.

அடுத்து, அலீ ஆஃகு மகோயல் அவர்கள். அன்னார் 1970-ல் பிறந்தார்கள். அன்னார் தம் தந்தையாருடன் சேர்ந்து 1999-ல் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். தொழில் அடிப்படையில் விவசாயியாக இருந்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் பீலரேவின் முஅத்தினாராக இருந்தார்கள். சில காலங்களுக்கு முன் தீவிரவாதம் காரணமாக, அன்னார் தமது கிராமத்தை விட்டு இடம் பெயர்ந்து செல்ல நேரிட்ட போது அன்னார் மஹ்மதிஆபாதில் வசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். மிகவும் கலப்பற்ற அஹ்மதியாக இருந்தார்கள். தொழுகைகள் மற்றும் சந்தாக்களில் முறையாக செயல்பட்டு வந்தார்கள். ஜமாஅத்தின் எல்லாப் பணிகளிலும் மிக அதிகமாக பங்கு பெறுபவராக இருந்தார்கள்.

அடுத்ததாக, மூஸா ஆஃகு அத்ராஹி ஆவார்கள்.ஷஹாதத்தின்போது அன்னாருக்கு வயது 53 ஆக இருந்தது.

அன்னாரும் விவசாயம் செய்து வந்தார்கள். ஜமாஅத் பணிகளில் எப்போதும் முன்னிலை வகித்து வந்தார்கள். அஹ்மதி ஆவதற்கு முன்பு வஹாபிய்யா பிரிவில் மும்முரமான உறுப்பினராக இருந்தார்கள். தொழுகைகளை முறையாகப் பேணக்கூடியவர், தவறாமல் தஹஜ்ஜுத் தொழக்கூடியவர் ஆவார். மஃக்ரிப் தொழுகைக்குப் பள்ளிவாசலுக்கு வந்தால் இஷா தொழுதுவிட்டு தான் திரும்பிச் செல்வார்கள். மஃக்ரிப் மற்றும் இஷா நேரத்தை பள்ளிவாயிலில் கழித்து, திக்ரே இலாஹியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஓர் உண்மையான நம்பிக்கை கொண்ட அஹ்மதியாகவும், களங்கமற்ற அர்ப்பணமாகக்கூடிய அஹ்மதியாகவும் இருப்பதற்கு செயல் முன்மாதிரியாக இருந்தார்கள் என்று அன்னாரைப் பற்றி அனைவரும் சாட்சி அளிக்கின்றனர். அன்னார் தவறாமல் எனக்கு துஆவிற்கு கடிதங்களும் எழுதி வந்தார்கள். நானும் காலத்தின் கலீஃபா அவர்களுக்காக தவறாமல் துஆ செய்கின்றேன் என்று கூறி வந்தார்கள்.

அடுத்து, ஒன்பதாவதாக அஃகு உமர் ஆஃகு அப்துர் ரஹ்மான் ஆவரார்கள். ஷஹாதத்தின்போது அன்னாருக்கு வயது 44 ஆக இருந்தது. முன்பே கூறியதுபோன்று, அனைவரையும் விட சிறிய வயதுள்ளவராக இருந்தார்கள். 1999-ல் 20 வயதில் அன்னார் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். அதற்குப் பிறகு ஜமாஅத் உடனான தொடர்பு மற்றும் நன்றியுணர்வில் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். மஹ்திஆபாத் ஜமாஅத்தின் மிகவும் கலப்பற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள உறுப்பினராக இருந்தார்கள். இமாம் இப்ராஹீம் சாஹிப் அவர்களின் வலது கரமாக இருந்தார்கள். மஹ்தி ஆபாதின் நாயிப் இமாமுஸ் ஸலாத் ஆகவும் இருந்தார்கள்.

பயங்கரவாதிகள் பள்ளிவாசலில் நுழைந்தவுடன், அவர்கள் இமாம் இப்ராஹீம் சாஹிப் அவர்களைப் பற்றி கேட்ட பிறகு துணை இமாம் யார்? என்று கேட்டனர். அன்னார் எவ்வித தயக்கமும் இன்றி நான் தான் என்று கூறினார்கள். அன்னார் எப்பொழுதும் பள்ளிவாயிலுக்கு முதலாவதாக வரக்கூடிய நபர்களில் ஒருவராக இருந்தார்கள். தொழுகையை மிகவும் பணிவுடனும் மன்றாடுதலுடனும் நிறைவேற்றி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை முறையாக தொழுபவராக இருந்தார்கள். பள்ளிவாசலுக்குத் தம் பிள்ளைகளையும் உடன் அழைத்து வந்தார்கள். அவர்களின் தர்பிய்யத்தில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார்கள். எனக்குக் கடிதம் எழுதுவதையும் அன்னார் முறையாகக் கடைபிடித்து வந்தார்கள். மிதிவண்டி ஓட்டுவதில் மிகவும் திறமையானவராக இருந்தார்கள். அப்பகுதி முழுவதும் நீண்ட நெடும் பயணங்கள் செய்து வந்தார்கள். நான்கு முறை டோரீயிலிருந்து 265 கிலோமீட்டர் பயணத் தூரத்தைக் கடந்து சென்று வாகா டாகூ குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவில் கலந்து கொண்டுள்ளார்கள். 2008-ல் கிலாஃபத் நூற்றாண்டு மாநாட்டில் புர்கினாஃபாஸ்ஃவிலிருந்து கானா வரை சைக்கிள்களில் செல்லக்கூடிய பயணக் குழுவில் அன்னாரும் இருந்தார்கள்.

இங்கு ஒவ்வொரு பெயருடனும் ஆஃகு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுடைய அறிக்கையின் மூலம் நான் புரிந்து கொண்டது என்னவென்றால், இதனுடைய அர்த்தம் இன்னார் மகன் என்பதாகும். அதாவது இன்னார் மகன், இன்னார் இன்னார் மகன் என்பதேயாகும். எவ்வாறு இருப்பினும், இவர்களைப் பற்றி மேற்கொண்டு அவர்கள் எழுதுகிறார்கள்: எட்டு நபர்களை ஷஹீதாக்கிய பிறகு, கடைசியில் ஆஃகு உமர் ஆஃகு அப்துர் ரஹ்மான் சாஹிப் மட்டும் எஞ்சியிருந்தார்கள். தம் வயது அடிப்படையில் அனைவரையும்விட சிறியவராக இருந்தார்கள். பயங்கரவாதிகள் அன்னாரிடம், நீ இளைஞனாக இருக்கின்றாய் அஹ்மதிய்யத்தை நிராகரித்து உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்றார்கள்.

அதற்கு அன்னார், எந்த வழியில் சென்று என் மூதாதையர்கள் தியாகம் செய்தார்களோ நானும் என் இமாம் மற்றும் முன்னோர்களின் அடிச்சுவட்டில் நடந்து ஈமானுக்காக என் உயிரை அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன் என்று வீரமாக பதில் அளித்தார்கள். இதனால் அன்னார் மிகவும் இரக்கமின்றி முகத்தில் சுட்டு ஷஹீதாக்கப்பட்டார்கள்.

புர்கினாஃபாஸ்ஃவில் பொதுவாக நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. பயங்கரவாதிகள் பல பகுதியில் மார்தட்டித் திரிகிறார்கள். சில நாட்களுக்கு முன்பு தீனியா மஜ்லிஸின் காயித் சாஹிப் தலைமையகத்தில், சென்டருக்கு, மிஷன் ஹவுஸ்க்கு வந்திருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

என்னுடைய கிராமத்தில் நான் பலசரக்குக் கடை வைத்துள்ளேன். ஒரு நாள் பயங்கரவாதிகளில் ஒருவன் அன்னாரின் கடைக்கு வந்தான். இது முற்றிலும் வேறு ஒரு பகுதியாகும். ஏதோ வாங்க வந்தான். பிறகு, இங்கும், அங்கும் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கு அன்னாரின் கடையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன.

அவன் காயித் சாஹிபிடம், இவர்கள் யார்? யாருடைய புகைப்படங்களை நீ கடையில் வைத்துள்ளாய்? என்று கேட்டான். அதற்கு, இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படங்கள் ஆகும் என்று காயித் சாஹிப் பதிலளித்தார்கள். அதற்கு அவன், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இல்லை. மாறாக, முஸ்லிம்களில் சில மக்கள் ஒன்றுகூடி ஒரு பிரிவை ஏற்படுத்திக் கொண்டார்கள். இது அந்த மக்கள் தான். இந்த மக்கள் காஃபிர்கள் ஆவர் என்று கூறினான்.

இந்த புகைப்படங்களை இங்கிருந்து அகற்றி விடு. இல்லையென்றால், அடுத்த முறை நான் இங்கு வரும்போது இந்த புகைப்படங்களை இங்கு கண்டால் பின்னர் உன் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என்று புறப்படும் முன்பு காயித் சாஹிப் அவர்களை மிரட்டிச் சென்றான். ஆனால், எவ்வாறு இருப்பினும், காயித் சாஹிப் அந்தப் புகைப்படங்களை அங்கேயே வைத்திருந்தார்கள். சில நாட்களுக்கு பிறகு, அவன் மீண்டும் ஏதோ வாங்க வந்தான். புகைப்படங்கள் அங்கே இருப்பதைக் கண்டான். பார்த்து விட்டுச் சென்றுவிட்டான். இந்த சம்பவத்தை காயித் சாஹிப் என்னிடம் கூறினார்கள் என்று கூறுகிறார்கள்.

அத்துடன் இன்னும் சில புகைப்படங்களும் இருந்தன. பயப்படுவதற்குப் பதிலாக, இனி நான் இன்னும் வேறு இடங்களிலும் புகைப்படங்களைத் தொங்க விடுவேன் என்று அன்னார் கூறினார்கள். இந்தப் பகுதி முழுவதும் நீண்ட காலமாக இந்தத் தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு அரசாங்கத்தின் கட்டுப்பாடு எதுவும் இல்லை. இந்தப் பகுதியின் எல்லை மாலியுடன் இணைகிறது அல்லது மற்றொரு புறத்திலிருந்து டோரீயின் பகுதியான நைஜருடன் இணைகிறது. இவ்வாறு பெல்ட் என்ற ஒரு நகரம் முழுவதும் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

**எவ்வாறு இருப்பினும், இவர்கள் அஹ்மதிய்யத்தின் ஒளி வீசும் நட்சத்திரங்கள் ஆவார்கள். தமக்குப் பின்னால், ஒரு முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அவர்களின் பிள்ளைகளையும், களங்கமற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வில் அதிகரிக்கச் செய்வானாக! இவர்களின் ஷஹாதத்துகளால் இந்தப் பகுதியில் அஹ்மதிய்யத்தை முடிவுக் கொண்டு வந்துவிடலாம் என்று எதிரிகள் எண்ணுகின்றனர்.**

ஆனால், முன்பை விட அதிகமாக இந்தப் பகுதியில் அஹ்மதிய்யத் வளரும் மற்றும் செழிக்கும். இன்ஷா அல்லாஹ். அங்குள்ள நிர்வாகம், அமீர் சாஹிப் அவர்களும் அங்கு நுட்பமான முறையில் தப்லீக் நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். இன்னும், அந்த மக்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்.

அல்லாஹ் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குப் பொறுமை மற்றும் தைரியத்தைத் வழங்கிக் கொண்டே இருப்பானாக அவர்களின் முன்னோர்கள் எந்த நோக்கத்திற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தார்களோ அதன் முக்கியத்துவத்தைப் புரிவதற்கும் அவர்களுக்கு நற்பேறு வழங்குவானாக.

எவ்வாறு இருப்பினும், இப்போது அங்கு ஒரு நுட்பமான முறையிலும், திட்டம் வகுத்தும் நாம் பணி செய்ய வேண்டும். இது குறித்து நான் முன்னரும் அவர்களுக்கு (நுட்பமான முறையில்) செயல்படுங்கள் என்று கூறியுள்ளேன்.

ஷஹீத்களின் குடும்பங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அவர்களை சொந்தக் காலில் நிற்க வைப்பதற்காக நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் இருந்தே, ஸய்யிதுனா பிலால் ஃபண்ட் என்ற பெயரில் ஒரு

ஃபண்ட் நிறுவப்பட்டுள்ளது. அதிலிருந்து ஷஹீதுகளின் (குடும்பத்திற்காக) செலவிடப்படுகிறது.

இன்றைய நாட்களில், இந்த சம்பவத்திற்கு பிறகு சில மக்கள் தனிப்பட்ட முறையிலும், அமைப்புகளும், ஜமாஅத்களும் இந்தத் தேவைகளை நிறைவேற்ற இது அவர்களுக்கானது என்று சில தொகைகளை அனுப்புகிறார்கள். ஆனால், **ஒரு நிதியமைப்பு இருக்கும்போது அனைவரும் தாம் கொடுக்க விரும்பும் தொகைகளை ஸய்யிதுனா பிலால் ஃபண்டின் கீழ் கொடுக்க வேண்டும். அதற்கு பிறகு, இந்தத் தொகையை நாங்கள் செலுத்தியுள்ளோம். குறிப்பாக, எங்கள் நோக்கம் டோரியின் மஹ்தி ஆபாத்தின் ஷஹீதுகளுக்கு செலவிடுவதாகும் என்று கூறிவிடுங்கள்.**

**எவ்வாறு இருப்பினும் தலைமையகம் இது குறித்து முடிவு எடுக்கும். தொகைகள் வந்தாலும், வராவிட்டாலும் தலைமையகம் அந்த மக்களின் தேவைகளைக் கருத்தில் கொள்ளத்தான் செய்யும். நிறைவேற்றத்தான் செய்யும். நிறைவேற்றும் இன்ஷா அல்லாஹ். ஆனால், கொடுக்க விரும்பும் மக்கள் இந்த ஸய்யிதுனா பிலால் ஃபண்டில் தொகையை செலுத்துங்கள். இது அந்த ஷஹீதுகளின் குடும்பத்தின் மீது நாம் செய்யும் கருணை ஒன்றும் அல்ல. மாறாக, அவர்களின் தேவையை கருத்தில் கொண்டு அவற்றை நிறைவேற்றுவது நமது கடமையாகும்.**

இறுதியில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை முன் வைக்கின்றேன். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவன் உங்களை வீணாக்கிவிடுவான் என்று எண்ணாதீர்கள். நீங்கள் இறைவனின் கையால் பூமியில் நடப்பட்ட ஒரு விதையாவீர்கள். இறைவன் கூறுகின்றான்: இந்த விதை வளரும்; கனி தரும், எல்லாப் புறத்திலிருந்தும் அதன் கிளைகள் வெளிப்படும். ஒரு பெரிய மரமாக மாறிவிடும். இன்ஷா அல்லாஹ். எனவே இறைவனின் வாக்குறுதியில் நம்பிக்கை கொள்பவர், இடையில் வரக்கூடிய சோதனைகளைக் கண்டு அஞ்சாதவர் அருளுக்குரியவர் ஆவார். ஏனெனில், இறைவன் உங்களை சோதித்துப் பார்ப்பதற்காக சோதனைகள் வருவதும் அவசியமாகும்.

எனவே இந்தத் தியாகத்தை செய்திருக்கக்கூடியவர்களோ இந்த சோதனையில் முழுமையாக வெற்றி பெற்றுவிட்டார்கள். இப்பொழுது பின் தங்கியுள்ளவர்களுக்கும் தங்களது ஈமான் மற்றும் நம்பிக்கையில் முன்னேறுவதற்கான சோதனை உள்ளது. நாம் நமது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முழுமை பெற அல்லாஹ் அவர்களுக்கும் நமக்கும் நற்பேறு வழங்குவானாக.

அல்லாஹ் இந்த ஷஹீதுகளின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. இறைவன் அவர்களின் தியாகங்களை மலரச் செய்வானாக. கனிதரச் செய்வானாக. அதன் விளைவாக ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மையான போதனை மிக விரைவாக உலகில் பரவுவதை நாம் காணக்கூடியவர்களாக ஆவோமாக. அறிவீனம் உலகிலிருந்து அழியட்டுமாக. ஏக இறைவனின் உண்மையான ஆட்சி உலகில் நிலைபெறட்டுமாக.

நான் இப்பொழுது தொழுகைக்குப் பிறகு தொழ வைக்கப் போகும் இந்த ஷஹீதுகளின் ஜனாஸாவுடன் இன்னும் இரண்டு கலப்பற்ற மக்களின் ஜனாஸாவும் உள்ளது. அவர்களில் ஒருவர் அமெரிக்காவில் வசித்து வந்த சூஃபி குதா பக்ஷ் ஸோர்வீ சாஹிப் அவர்களின் மகனான டாக்டர் கரீமுல்லாஹ் ஸோர்வீ சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 83 ஆவது வயதில் ஜனவரி 4 அன்று மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் தந்தை சூஃபி குதா பக்ஷ் சாஹிப் அவர்கள் 17 வயதில் 1928 ஆம் ஆண்டு காதியான் சென்று இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்தார்கள். கரீமுல்லாஹ் ஸோர்வீ சாஹிப் ஹஸ்ரத் மலிக் ஸைஃபுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மருமகனும் ஆவார்கள். மிகவும் அறிவு படைத்த மனிதராக இருந்தார்கள். அன்னார் சில புத்தகங்களும் எழுதியுள்ளார்கள். அன்னாருக்கு ஜமாஅத் சேவைகள் செய்யவும் அதிக நற்பேறு கிடைத்துள்ளது. அல்லாஹ் அன்னாருக்கு பாவமன்னிப்பு வழங்கி அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா கரீமுல்லாஹ் ஸோர்வீ சாஹிப் அவர்களின் துணைவியார் உடையது. கரீமுல்லாஹ் ஸோர்வீ சாஹிப் அவர்களின் துணைவியாரான அலிமத்துல் லத்தீஃப் ஸோர்வீ சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் அமெரிக்காவில் வசித்து வந்தார்கள். அன்னார் மலிக் ஸைஃபுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள். அன்னார் தம் கணவரின் மரணத்திற்கு இரண்டு நாட்களுக்கு பிறகு ஜனவரி 6 அன்று 78 வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். நான் கூறியதைப் போன்று மலிக் ஸைஃபுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மகளாக அன்னார் இருந்தார்கள். அன்னாரின் தாயார் பெயர் ரஷீத் ஷோகத் ஆகும். அன்னார் ரப்வாவில் வெளிவரும் மிஸ்பாஹ் இதழின் ஆசிரியையாக இருந்துள்ளார்கள். அன்னார் காதியானில் பிறந்தார்கள். மிகவும் அறிவுசார் பணிகளில் ஆர்வம் கொண்ட பெண்மணியாக இருந்தார்கள். படித்திருந்தார்கள். M.SC., முடித்திருந்தார்கள். அன்னாருக்கு ஜமாஅத் சேவைகளுக்கான நல்வாய்ப்பும் கிடைத்தது. அல்லாஹ் மர்ஹூமா அவர்களுக்கும் பாவமன்னிப்பு வழங்கி அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அன்னாரின் சகோதரர் மலிக் முஜீபுர் ரஹ்மான் சாஹிப் தம் சகோதரி மற்றும் சகோதரியின் கணவரைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்கள்: மிகவும் அன்பு செலுத்தக் கூடிய தம்பதிகளாக இருந்தார்கள். அவர்கள் மிகவும் கஷ்டங்களை சகித்துள்ளார்கள். ஆனால், எப்போதும் எந்த விஷயத்தைப் பற்றியும் எதுவும் முறையீடு செய்ததில்லை. **நான் அவர்களை எப்போதும் எவரைப் பற்றியும் எதிர்மறையாக பேசி பார்த்ததில்லை.**

இருவருமே ஆழமான அறிவுப் பெருங்கடலாக இருந்தார்கள். வாழ்வின் இறுதி நொடிப்பொழுது வரை எல்லார் மீதும் அன்பு செலுத்தக்கூடியவர்களாகவும், அவர்களுடைய தேவைகளைக் கருத்தில் கொள்பவர்களாகவும் மிக அதிகமாக அன்பு நேசம் காட்டக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

மிகவும் முழுமையானதாகவும் சிறந்ததாகவும் தம் வாழ்வைக் கழித்தார்கள். மாஷாஅல்லாஹ். தமது சமூகம் மற்றும் சுற்றுச் சூழலில் மற்றவர்கள் மீது மிக அதிகமாக நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக நல்ல செல்வாக்கு கொண்டிருந்த சானறோர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி அவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

தமிழாக்கம் :
மவ்லவி அதாவுல் முக்னீ

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 23 February 2023 Issue No. 8

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## முதல் பக்கத் தொடர்ச்சி... (மல்ஃபூஸாத்)

கிடைப்பார்? அன்னார் மீது எறியப்படாத எந்த அசுத்தமும், ஏச்சு பேச்சுகளும் இல்லை. முஸ்லிம்கள் மௌனமாக அமர்ந்திருப்பதற்கான நேரமா இது? தற்போது எவரும் எழுந்து நிற்கவில்லையென்றால், உண்மைக்கு சாட்சியம் அளித்து பொய்யின் வாயை அடைக்கவில்லையென்றால், நிராகரிப்பாளர் வெட்கமின்றி நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பழிசுமத்திக் கொண்டு செல்வதையும், மக்களை வழிகெடுப்பதையும் ஒருவர் ஆகுமானதாக கருதுகின்றார் என்றால் அத்தகைய நபர் நினைவிற் கொள்ளட்டும். அவர் நிச்சயம் பெரும் விசாரணையின் கீழ் இருக்கின்றார்.

உங்களுக்கு கிடைத்துள்ள அறிவையும், ஆற்றலையும் இந்த வழியில் செலவிட வேண்டும். மேலும், மக்களை துன்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். நீங்கள் தஜ்ஜாலை கொல்லாவிட்டாலும் கூட அவன் கண்டிப்பாக மடிந்தே விடுவான் என்று ஹதீஸிலிருந்து நிரூபணமாகியுள்ளது. பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்து இந்த துன்பங்கள் துவங்கியுள்ளன. மேலும், அதற்கு முடிவு கட்டப்படுவதற்கான நேரம் தற்போது அருகில் உள்ளது. எனவே, முடிந்த வரை முழுமையான முயற்சி செய்வதும், ஒளியையும், வெளிச்சத்தையும் மக்களுக்கு காட்டுவது ஒவ்வொருவரின் கடமை ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 355- 356, காதியான் பதிப்பு-2018)

## முதல் பக்கத் தொடர்ச்சி... (தப்ஸீரே கபீர்)

அதாவது, முழு பிரபஞ்சமும் ஒரே தொடர்பில் பிணைக்கப்பட்டுள்ளது. ஒரு பொருள் மற்றொன்றைச் சார்ந்துள்ளது. மனிதனின் பிறப்பே அசல் விஷயம் ஆகும். அவனது முதன்மையான உணவு புலால் உணவு ஆகும். விலங்குகள் மரம், செடி போன்றவற்றிலிருந்து உணவைப் பெறுகின்றன. பின்னர், அந்த மரமும், செடி, கொடிகளும் விண்ணிலிருந்து தண்ணீரைப் பெறுகின்றன. அந்த தண்ணீர் மனிதன் பருகுவதற்கும் பயன்படுகின்றது. பின்னர் அதே தண்ணீரிலிருந்து மனிதனுக்கு உணவாக அமையும் தாவரங்களும் முளைக்கின்றன. இந்த அனைத்து விஷயங்களும் இரவு, பகல், சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் தாக்கங்களினால் வளர்ச்சி அடைகின்றன. மற்றொரு பக்கம் அவை நிலைபெற்றிருப்பதற்கான வழிமுறையாக கடல் உள்ளது. அதில் தண்ணீருக்கான கருவூலம் உள்ளது. அதிலிருந்து தண்ணீர் ஆவியாகி பின்னர் மனிதனுக்கு கிடைக்கின்றது.

அந்தக் கடலை அதன் நிலையில் நிலை நிறுத்துவதற்காக தண்ணீரை ஒன்றுகூட்டும் மலை உள்ளது. அங்கிருந்து நதிகளின் மூலமாக தண்ணீர் ஓடுகின்றது. அந்த தண்ணீர் குறிப்பான வழித்தடங்களில் ஓடி கடலில் சென்று கலக்கின்றது. நிலம் மனிதன் குடியிருப்பதற்கு தகுதியில்லாமல் ஆகிவிடும் அளவிற்கு அது பூமியின் மட்டத்தில் பரவிவிடுவதில்லை. இந்த அனைத்து விவகாரங்களிலிருந்தும் ஒரு தெளிவான முடிவு கிடைக்கின்றது. அது என்னவென்றால், உலகின் ஒவ்வொரு விஷயமும் மற்றொன்றுடன் தொடர்புடையதாக உள்ளது. மேலும் உலகம் என்பது பலதரப்பட்ட பொருட்களின் தொகுப்பு அல்ல. மாறாக, ஒரு சங்கிலியின் இணைப்புகளைப் போன்றதே அதன் வேறுபாடுகள் ஆகும். ஒரு வளையத்தை துண்டித்துவிட்டால் பின்னர் அந்த சங்கிலி சங்கிலியாக இருக்காது. அதேபோன்று பிரபஞ்சத்திலிருந்து ஒரு பொருளை வெளியேற்றினால் முழு உலகமும் அழிந்துவிடும். கடல் வற்றிவிட்டால் தண்ணீர் இல்லாமல் போய்விடும். நதி வற்றிவிட்டால் கடல் வற்றிவிடும். நதி ஓடுவதற்கு வழித்தடங்களை அமைக்கும் பாதைகளை அகற்றிவிட்டால் முழு உலகிலும் தண்ணீர் பரவிவடும். மேலும், நிலம் வசிப்பதற்கு தகுதியானதாக இருக்காது. மலைகளை அழித்துவிட்டால் பூமியில் நிலநடுக்கங்கள் வந்துவிடும். மேலும் மனிதன் அழிந்துவிடுவான். மேலும், நதிகளுக்கான தண்ணீர் கருவூலம் எஞ்சியிருக்காது. மேலும், அந்த தண்ணீர் முழுவதும் ஒரேயடியாக கடலில் சென்று கலந்துவிடும். ஒருபக்கம், உலகம் வெள்ளக்காடாக காட்சியளிக்கும். மற்றொரு பக்கம் ஆண்டு முழுவதும் தண்ணீர் தேக்கி வைக்கும் சூழலும் அழிந்துவிடும். சந்திரனையும், நட்சத்திரங்களையும் அழித்துவிட்டால் பின்னர் அவற்றால் உலக படைப்புகளில் ஏற்பட்டு வந்த தாக்கங்கள் அகன்றுவிடும். மேலும் பூமி தனது நிலையில் நிலைபெற்றிருக்காது.

சூரியனை பிரித்துவிட்டால், பின்னர் மேகங்கள் எனும் தொடரும் நீங்கிக் கொண்டு செல்லும். மேலும், மக்கள் தண்ணீருக்காக ஏங்குவார்கள். மேலும், காய்கறிகள் வளர்வது தடைபட்டு விடும். மேலும், மனிதனின் ஆரோக்கியம் சீர்கெட்டுவிடும். மேலும் அவனுக்கான புலால் உணவு கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகளும் எஞ்சியிருக்காது.

சுருக்கமாக, இந்த முழு பிரபஞ்சமும் இணைந்து மனிதனுக்கு தொண்டாற்றி வருகிறது. மேலும், அதன் ஒவ்வொரு பகுதியும் இரண்டாவது பகுதி நிலைபெற்றிருப்பதற்கான வழிமுறையாகும். நிலைமை இவ்வாறு இருக்கும்போது இரண்டு கடவுள்க் கொள்கை எவ்வாறு சரியானதாக இருக்க முடியும்? உலகை பல கடவுள்கள் படைத்தனர் என்றால், பின்னர் மற்ற பகுதியிடமிருந்து சுதந்திரமான பகுதியாக இருக்கும் அந்தப் பகுதி எது? அதனை வேறு ஒருவர் படைத்திருப்பார் என்பதை எவ்வாறு புரிய வைப்பது?


முழு பிரபஞ்சமும் ஒரு சங்கிலியின் வளையங்களை உள்ளடக்கியுள்ளது என்றால் பின்னர் அதனை படைக்கக்கூடியவன் ஒரே இறைவன் ஆவான் என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும். முழு பிரபஞ்சத்தையும் படைப்பதற்கு இறைவனிடம் ஆற்றல் இருக்கவில்லை. அதனால் பல கடவுள்கள் இணைந்து பணிகளை பங்கிட்டுக் கொண்டனர். மேலும், ஏற்கனவே திட்டமிடப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப ஒவ்வொரு கடவுளும் தத்தமது பகுதியை முழுமை செய்தார் என்று கூறினால் தவிர இந்த உண்மையை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. அவ்வாறு கூறினால் அந்தக் கொள்கை இணைவைப்பாளர்களின் கொள்கையாக இருக்காது. மேலும் அது பகுத்தறிவிற்கு எதிரானதும் கூட. ஏனெனில், குறைபாடுடைய இருப்பு இறைவனாக இருக்க முடியாது. எனவே இந்த சான்றுகளின் ஒளியில் ஒரேயொரு முடிவே கிடைக்கின்றது. அது என்னவென்றால், إِلٰهُكُمْ إِلٰهٌ وَّاحِدٌ உங்களது இறைவன் ஏக இறைவனே ஆவான்.

இறைவன் என்று அழைக்கப்பட்ட அனைவரும் மரணித்துவிட்டனர் என்று முந்தைய வசனத்தில் இரண்டாவது கருத்து கூறப்பட்டிருந்தது. எனவே அவர்கள் மரணமடைந்துவிட்டபோது, பின்னர் அந்நிலையிலும் ஏக இறைவனே எஞ்சியிருக்கின்றான். மேலும் அவன் மரணத்திற்கு அப்பாற்பட்டவன் ஆவான்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 151, பதிப்பு காதியான் 2010)

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad